பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 14 செவ்வாய்க்கிழமை (29.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 03

## பிரபாவின் கருத்துக்கு அரசுத் தரப்பில் வரவேற்பு

# யுத்த நிறுத்த உடன்பாடு மீளாய்வும் அமைதிப் பேச்சும் ஒரே சமயத்தில்!

## ஜனாதிபதி நேற்று யோசனை; ராஜதந்திரிகள் முன் தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 29

**"யுத்த நிறுத்த செயற்பாட்டை மீளாய்வு செய்யும் அதேசமயம், நிரந்தரத் தீர்வுக்கு வழிசெய்யும் பயனுள்ள பேச்சுக்கு எம்மைத் தயார் செய்யலாம். இந்த இரண்டுமே ஒரே சமயத்தில் - சமாந்தரமாக - முன்னெடுக்கப்படலாம். அவை ஒன்றன்பின் ஒன்றாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அவசியமல்ல" - இப்படிக் கூறியிருக்கின்றார் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ராஜதந்திரிகளை நேற்றுச் சந்தித்த சமயம் அவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியதாவது:-

பேச்சு வாயிலான அரசியல் தீர்வு மூலம் நிலையான சமாதானத்தை எட்டுவது தொடர்பில் என்னுடைய கொள்கை நிலைப்பாட்டையும், அணுகுமுறையையும் கடந்த 19ஆம் திகதி பதவியேற்றதைத் தொடர்ந்து நான் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

கடந்த காலத்தில் எமக்கு உதவிய நட்பு நாடுகளின் ஆதரவுடனும், விசாலமான அடிப்படையில் அமைந்த கலந்துரையாடலுடனும் இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எனக்குள்ள திடசங்கற்பத்தை மீண்டும் நான் வலியுறுத்தத் தேவையில்லை என நினைக்கிறேன்.

இந்த விடயம் தொடர்பில் இணைத் தலைமை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகியவற்றோடு கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும்படி வெளிவிவகார அமைச்சையும், சமாதானச் செயலகத்தையும் ஏற்கனவே நான் பணித்துள்ளேன்.

என்னைப் பொறுத்தவரை சமாதான நடவடிக்கை என்பது தேசிய அல்லது சர்வதேச ரீதியில் யாரையும் வெற்றிகொள்வதற்கான ஆரவார விடயமல்ல. அது எங்கள் சமூகத்தை ஆழ ஊடுருவியிருக்கும் மிகக் குழப்பமான விடயத்திற்குத் தீர்வுகாணும் ஒரு முக்கிய விவ

(16ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்தார். அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

## அரசில் இருக்கும் இடதுசாரிகள் பிரபாவின் உரைக்கு வரவேற்பு

கொழும்பு, நவ.29

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையை இடதுசாரிகள் நேற்று வெகுவாக வரவேற்றிருக்கின்றனர்.

ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான சிறந்த சமிக்ஞையாக பிரபாகரனின் உரை கருதப்படுவதாகவும், அமைதி முயற்சிகளை முன்னெடுக்க இது உத்வேகமாக அமையுமென்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சரும், சமசமாஜக் கட்சியின் முக்கியஸ்தருமான பேராசிரி யர் திஸ்ஸ விதாரண நேற்றுத் தெரிவித்தார்.

"இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் பிரபாகரனின் உரையை முக்கியமான ஒன்றாகக் கருதுகிறோம். தென்னிலங்கையில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தி, அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், ஒத்துழைப்புகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

**லண்டன் மாவீரர் தினக் கூட்டத்தில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை உள்ளே.**

### கதிர்காமர் கொலைச் சந்தேகநபரான

## ஞானக்கோனை நீதிமன்றில் ஆஜர்செய்யக் கோரி மனு

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தொழிலதிபர் சார்பில் ஆள்கொணர்வு மனுவொன்று நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியப் பிரஜையான டெனியல் பி.ஸ்மெத் என்பவர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் பிரதிவாதிகளாக சார்ள்ஸ் ஞானக்கோன், கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணிப்பாளர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவின் முதலாம் பிரதிவாதியான சார்ள்ஸ் ஞானக்கோனை மன்றில் ஆஜர்படுத்தி அவரை. விடுதலை செய்ய இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று மேற்படி மனுவின் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கேட்கப்பட்டுள்ளது. (க)

## 3 பொலீஸாருக்கும் தமிழீழ நீதிமன்றில் காவல் நீடிப்பு

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூன்று இலங்கைப் பொலிஸார் மீதான விசாரணை கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ நீதிமன்ற நீதியாளர் அறையில் நேற்று நடைபெற்றது.

இந்த விசாரணைகளை அடுத்து அடுத்த மாதம் 20ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதியாளர் உத்தரவிட்டுள்ளார்.

## ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா வழங்கிய காசோலைகளுக்குத் தடையாம்

கொழும்பு,நவ.29

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது ஜனாதிபதி நிதியில் இருந்து வழங்கிய 75 கோடி ரூபா பெறுமதியான காசோலைகளுக்கான கொடுப்பனவுகளை நிறுத்திவைக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பெருந்தொகைப் பணம் காசோலை மூலம் முன்னாள் ஜனாதிபதி சம்பந்தப்பட்டுள்ள அரசசார்பற்ற நிறுவனமொன்றுக்கும் மற்றொன்று அனுராதபுரத்தில் அவர் பங்கேற்ற விழாவொன்றின்போது அவரால் முன்வைக்கப்பட்ட செயல்திட்டமொன்றை முன்னிட்டு வடமத்திய மாகாண அரசியல்வாதியொருவரின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு ஜனாதிபதி நிதியத்திலிருந்து அவசர கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுப் பக்கம் இ.தொ.கா. தாவ பகீரதப் பிரயத்தனம்!

கொழும்பு, நவ.29

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அடுத்த பல்டிக்கு தயாராகின்றது. நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முகம்கொடுக்க திராணியற்ற இ.தொ.கா. தலைமை, இந்தியத் தலைவர்கள் மூலம் மீண்டும் அரசுடன் சங்கமமாக பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெறுவார் என்ற திட நம்பிக்கையுடன் ஆளும் கட்சித் தரப்பில் இருந்து எதிர்க்கட்சியின் பக்கம் 'பல்டி அடித்த' இ.தொ.கா., இப்பொழுது இரண்டும்கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இ.தொ.கா.தலைவரின் தன்னிச்சையான முடிவை அப்போதே எதிர்த்த இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், இப்போது இ.தொ.கா. தலைமையை உதாசீனப்படுத்திவிட்டு அரசுடன் இணைவதற்குத் தயாராகிவிட்டனர் எனத் தெரிகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து தமது விருப்பத்தையும் அவர்கள் தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,நவ.29

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட விபத்தொன்றின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

திருகோணமலை, விகாரை வீதியைச் சேர்ந்தவரும் தற்போது விசுவமடு பிரமந்தனாறு, நாதன்குடியிருப்பை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான கப்டன் செவ்வீரன் என்றழைக்கப்படும் பொன்னுத்துரை கிரிதரன் என்ற போராளியே வீரச்சாவடைந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-204)

## பண்டாரவன்னியன் பெயரில் எச்சரிக்கைச் சுவரொட்டி

வடமராட்சி,நவ.29

தேசத்துரோகிகளுக்கு எச்சரிக்கை என்ற தலைப்பில் பருத்தித்துறைப் பகுதியில் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது. வன்னியன் படை என்ற பெயரில் எச்சரிக்கை சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

இராணுவத்தினருடன் தொடர்புவைத்திருக்கக்கூடாது. அவர்களுடன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றக்கூடாது, பொலீஸாரை வீட்டுக்கு அழைக்கக் கூடாது, வீதிகளில் கூடிநின்று சேட்டை புரிவது நிறுத்தப்பட வேண்டும்.

கலாசாராச் சீர்கேட்டை நிறுத்துக என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட இச் சுவரொட்டியின் இறுதியில் உங்கள் கண்களுக்கு பேனாமை தெரியாவிடில் துப்பாக்கி பதில் சொல்லும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-173)

## இளைஞ[illegible] கொட்டனடி

யாழ்ப்பாணம்,நவ.29

பொம்மைவெளிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கொட்டனடிக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று காலை 8 மணிக்கு இடம்பெற்றது.

பொம்மைவெளியைச் சேர்ந்த தர்மலிங்கம் சிறிவேந்தன் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்த இளைஞரை அவரது வீட்டில் வைத்தே சிலர் தாக்கிவிட்டுச் சென்றனர் என்று கூறப்படுகின்றது. படுகாயமடைந்தவர் யாழ். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-14-12)

### மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கேற்க

## யாழ்.வந்த விடுதலைப் புலிகள் நேற்று வன்னி திரும்பினர்

யாழ்.மாவட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்ள வன்னிப் பிரதேசத்தில் இருந்து வந்திருந்த இளம்பரிதி, பாப்பா, மகேந்தி, ஈஸ்வரன் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் நேற்று நண்பகல் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித் துணையுடன் வன்னி திரும்பினர்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஏ-9 பிரதான வீதியால் தமது பயணத்தை மேற்கொண்டனர். இவர்கள் சாவகச்சேரி நகரில் பொதுமக்களுடன் கலந்துரையாடிச் சென்றனர். இவர்களுடன் மோட்டார் சைக்கிளில் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் பின் தொடர்ந்து முகமாலை வரை சென்று வழியனுப்பி வைத்தனர். (ஒ-31)

## நவாலி பிரதேசத்தில் அபிவிருத்திச்சங்கம் அங்குரார்ப்பணம்

நவாலிப் பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கென நவாலி பிரதேச முன்னேற்றச் சங்கம் என்ற பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு ஆகிய பிரதேச மக்களை ஒருங்கிணைத்து இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருடகாலமாக தற்காலிகமாக செயற்பட்டுவந்த இந்த அமைப்பு தற்போது சகல மக்களையும் இணைந்து நவாலி பிரதேச முன்னேற்ற சங்கமாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும், சங்கம் விரைவில் பதிவுசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-185)

## காணாமற்போனோர் தொடர்பாக மனுதாக்கல்

1996ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமற்போனவர்கள் என்று கூறப்படும் மூவர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் யாழ். நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்ற நீதிவான் எதிர்வரும் ஜனவரிமாதம் 25ஆம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார்.

கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்தவர்களான ஆசீர்வாதம் பெர்னாண்டோ ஜெயக்காந்தன், பேனாட் ஜோன்சன் மற்றும் பாசையூரைச் சேர்ந்தவரான அன்ரனி அலிஸ்ரன் ஆகியோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்களே தாக்கல்செய்யப்பட்டுள்ளன. (ஒ-12-14)

## அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதல் வங்கிகள் ஊடாகவே ஓய்வூதியம்

கொழும்பு,நவ.29

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவை வங்கி ஊடாக வழங்கும் நடைமுறையைச் செயற்படுத்துவதற்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பான அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது சுமார் நான்கு லட்சம் ஓய்வூதியர்கள் அசௌகரியங்களுக்கு உட்படாது எதுவிதத் தாமதமுமின்றி தாம் விரும்பும் வங்கிக் கிளையொன்றில் தமது ஓய்வூதியத்தைப் பெறக்கூடியவர்களாக இருப்பர் என்று சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் டீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியத் திணைக்களம் மூலம் ஓய்வூதியத் தொகை நேரடியாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்குகளில் கொடுப்பனவு வரவு வைக்கப்படும். இதன் மூலம் பிரதேசச் செயலகங்களின் வேலைப்பளு குறையும். ஓய்வூதியர்கள் இலகுவாகத் தமது ஓய்வூதியக் கொடுப்பனவை பெறக்கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு கூறியுள்ள செயலாளர் ஓய்வூதியர்கள் தாம் விரும்பும் அரச அல்லது தனியார் வங்கி ஊடாக ஓய்வூதியத்தைப் பெறமுடியுமெனவும் தெரிவித்தார்.(ஒ-206)

## சாவகச்சேரியில் காலம் கடந்த பதிவு

சாவகச்சேரி, கச்சாய் வீதி, லிகோரியார் தேவாலயத்தில் இன்று செவ்வாய் காலை பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. இந்தக் காலம் கடந்த பதிவு நடவடிக்கைக்கு கியூடெக் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (ஒ-31-190)

## மீனவர் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்

வடமராட்சி,நவ.29

யாழ். குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக படைத்தரப்புடன் ஆராய்வதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்துள்ள இக்கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.தவரத்தினம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க உபதலைவர் குட்டித்தம்பி தனபாலசிங்கம், பொதுமுகாமையாளர் சூரியகுமாரன் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஒ-173)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

முழங்காவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குமுழமுனையைச் சேர்ந்த தியாகராசா சிவதாஸ் (வயது 22) என்பவர் படுகாயமடைந்தார்.

இவர் முழங்காவில் மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக நேற்று மதியம் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-14-12)

## சீனாவில் நிலக்கரிச் சுரங்க விபத்து 100 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்

சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள 'ஹிலோங்கியாவ்' என்ற மாகாணத்தில் டொங்பெங் பகுதியில் மிகப்பெரிய நி[illegible]க்கரி[illegible] சுரங்கம் உள்ளது. அந்தச் சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் இரவு வாயுக்கசிவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பெரும் வெடி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 200 அடி ஆழத்தில் சுமார் 220 சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். பெரும் வெடிவிபத்தில் சுரங்கத்தின் பல பகுதிகள் இடிந்து விழுந்தன. சுரங்கத்தின் வாசல் பகுதியும் இடிந்து வீழ்ந்ததால் உள்ளே சிக்கிய தொழிலாளர்கள் வெளியேறமுடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், சுமார் 50 தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெளியேறினர். மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இந்த வெடிவிபத்தின் காரணமாகவும், வாயுக் கசிவில் மூச்சுத் திணறியும் 100 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

70 பேர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 80 பேர்வரை காணாமல் போயுள்ளனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் மேற்கொ[illegible]ளப்பட்டு வருகின்றன. நிலக்கரிச் சுரங்கஙகளில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் பலியாவது வழக்கமாகிவிட்டது என்றார் அவர்.

## ஆங்சாங் சூயியின் வீட்டுக்காவல் நீடிப்பு

யாங்கான், நவ.29

மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூயியின் வீட்டுக்காவல் மேலும் ஓராண்டு காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு நேற்றுமுன்தினம் மியன்மாரின் இராணுவ நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. மியன்மார் உள்துறை அமைச்சக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

1962இல் இருந்து மியான்மாரில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இராணுவ ஆட்சிக்கு எதிரான தலைவர்கள் இணைந்து, ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த உருவாக்கிய கட்சி தேசிய ஜனநாயக லீக். இதன் தலைவராக ஆங் சான் சூ யி உள்ளார்.

1990இல் நடைபெற்ற தேர்தலில் இந்தக் கட்சி அமோக வெற்றிபெற்றது. ஆனால், இக்கட்சி ஆட்சி அமைக்க இராணுவ அரசு அனுமதிக்கவில்லை. ஆங்சான் சூ யி, கடந்த 15 ஆண்டுகளில் 10 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ளார். ஆங் சான் சூயி 1991 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### உலக அரங்கில்

## பயங்கரவாத நடவடிக்கைகளை கண்டித்து பொதுநலவாய அமைப்பு மாநாட்டில் தீர்மானம்

உலகின் அனைத்து வகையான பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டிப்பதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பனவாக இருக்கவேண்டும் எனவும் பொதுநலவாய அமைப்பின் மாநாட்டின் முடிவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மோல்டாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் முடிவில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தில்,

உலகில் அனைத்து வகையான பயங்கரவாத நடவடிக்கைகளையும் கண்டிப்பதும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவையாக இருக்கவேண்டும்.

பொதுமக்களைத் தாக்குதல்களுக்காக இலக்கு வைப்பதும், கொலை செய்வதும் எந்தவித காரணத்துக்காகவும் நியாயப்படுத்த முடியாது. தீவிரவாதத்தைத் தூண்டிவிடுதல், அதற்கு நிதி உதவிகள் வழங்கல் ஆகியவற்றைத் தடுக்க வேண்டிய, கையாள வேண்டிய பெ றுப்பு பொதுநலவாய உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் உண்டு என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவிக்கையில், அமெரிக்காவைப் பின்பற்றி ஐரோப்பியஒன்றியமும் ஹொங்கொங்கில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள உலக வணிகப் பேச்சுக்களில் கணிசமான முன்னேற்றகரமான முன்வைப்புகள் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (க)




### சென்னையில் விமானங்கள் மோதல் தவிர்ப்பு

## தமிழக முதலமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினார்

தமிழகத்தின் சென்னை விமான நிலையத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா புறப்படத் தயாராக இருந்த விமானமும், சிங்கப்பூரிலிருந்து வந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானமும் மோதிக் கொள்ளும் அபாயம் நூலிழையில் தவிர்க்கப்பட்டது. இதனால் முதல்வர் ஜெயலலிதா, பொலிஸ் அதிகாரி அலெக்ஸாண்டர் மற்றும் உயர் அதிகாரிகள் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் நடைபெற்றது.

மதுரையில் மழையினால் ஏற்பட்ட வெள்ள சேதப் பகுதிகளை பார்வையிட ஜெயலலிதா சென்னையில் இருந்து சிறப்பு விமானத்தில் புறப்பட்டார். அவரது விமானம் ஓடுதளத்தில் புறப்பட தயாராக இருந்த நிலையில், சிங்கப்பூரிலிருந்துவந்து தரையிறங்கிய இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று அதே ஓடுதளத்தில் வந்து கொண்டிருந்தது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அந்த விமானம் திடீரென்று நின்றுவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது

பறக்கத் தயாராக இருந்த முதல்வரின் சிறப்பு விமானத்தின் விமானி ஆபத்தை உணர்ந்து தனது விமானத்தை ஓடுதளத்தில் உடனடியாக நிறுத்திவிட்டார். இதனால் விபத்து தவிர்க்கப்பட்டு முதலமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் உயிர் தப்பினர். (க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சிங்களத் தலைமைக்கு இது இறுதியான வாய்ப்பு

இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் அரசியல் முக்கியத்துவத்தோடு எதிர்பார்க்கப்பட்ட தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை வெளியாகிவிட்டது.

அந்த உரையில் தலைவர் பிரபாகரன் கூறியவற்றையும், அந்த உரையின் வாசகங்களுக்கு - வரிகளுக்கு - இடையில் கூறாமல் விட்டதன் மூலம் சூசகமாக வெளிப்படுத்தியவற்றையும் தென்னிலங்கை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் தோன்றுகின்றது.

இந்த உரைக்கு தென்னிலங்கை ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம், உரையின் சாராம்சத்தைத் திரிவுபடுத்தும் வகையில் அவை வெளியிட்ட செய்திகள், பிரதிபலிப்புகள் அப்படியான எண்ணத்தைத்தான் எமக்குத் தோற்றுவிக்கின்றன.

ஈழப் பிரகடனத்தையோ அல்லது யுத்தத்துக்கான முன் அறிவிப்பையோ இந்த உரையில் பிரபாகரன் விடுப்பார் என்ற பதற்றத்திலிருந்த தென்னிலங்கை, அவை இரண்டும் இல்லை என்றதும் புலிகள் அமைப்பை வேறு விதமாகக் கருதத் தொடங்கி விட்டது என்றே - தெரிகின்றது.

தலைவர் பிரபாகரனின் உரையில் வரிகளுக்கு இடையில் பொதிந்து கிடக்கும் ஆழமான உண்மைகளை - அந்த உரைக்குப் பொழிப்புரை தருவது போல புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் லண்டனில் ஆற்றிய விளக்கத்தை - ஊடுருவிப் பார்க்கும் தென்னிலங்கைத் தலைவர்கள் வரப் போகின்ற ஆபத்தை ஓரளவு ஊகித்து அறிந்து கொண்டிருப்பார்கள்.

*''பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள், இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகியகால இடைவெளிக்குள் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான - உறுதியான - அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைபிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.''* - என்று தமது மாவீரர் தின உரைக்கு முத்தாய்ப்பு வைக்கின்றார் தலைவர் பிரபாகரன்.

நியாயமான தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்கு, இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு குறுகியகால இடைவெளியை அளித்திருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

அது மட்டுமல்ல. அந்தக் குறுகியகால இடைவெளி இறுதியானதும், உறுதியானதும் என்பதைக் கூடத் தெட்டத் தெளிவாக அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார். அந்தக் கூற்றின் ஆழத்தைப் புரிந்துகொள்வது இலங்கையின் புதிய அரசுத் தலைமையின் பொறுப்பாகும்.

'குறுகிய கால அவகாசம்', 'அடுத்த ஆண்டு' என்ற இரு சொற்பதங்களைத் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தியிருப்பதால் அந்தக் கால அவகாசம் குறித்து, தமக்கேற்ற விதத்தில் அரசுத் தலைமை வியாக்கியானம் செய்யுமானால் அது அத்தரப்புக்குப் பேரழிவாகவே முடியும் என்பது திண்ணம்.

தாம் ஜனாதிபதியானதும் தென்னிலங்கையில் சகல தரப்புடனும்பேசி மூன்று மாதத்துக்குள் ஒரு தீர்க்கமான - தீர்க்கமான முடிவுக்கு வருவார் என்று தமது 'மஹிந்த சிந்தனை' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

தென்னிலங்கையில் மூன்று மாதத்துக்குள் பேசி ஒரு முடிவை எடுத்துக் கொண்டு புலிகளுடன் பேச்சுக்குப் போவேன் என்று தேர்தல் காலத்தில் மஹிந்த கூறியதைத்தான் சிங்களத் தேசம் ஏற்றிருக்கின்றது. அதற்குத்தான் கால அவகாசம் - வாய்ப்பு - சந்தர்ப்பம் - வழங்கியிருக்கின்றார் தலைவர் பிரபாகரன் என்று கொள்ளவேண்டும்.

நவம்பர் 19ஆம் திகதி புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார் மஹிந்த ராஜபக்ஷ. நான்கு நாள்கள் கழித்து நவம்பர் 23ஆம் திகதி அவரது புதிய அரசு - அமைச்சரவை - பதவியேற்றது.

அன்றிலிருந்து மூன்று மாதங்கள் பெப்ரவரி 23இல் பூர்த்தியாகின்றது. அது மட்டுமல்ல, அத்தினத்தில்தான் தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கும் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

நான்கு ஆண்டு கால - யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்று - அர்த்தமற்ற சொற்பதங்கள் என விசனத்துடன் தலைவர் குறிப்பிடும் விவகாரங்களின் உண்மையான நான்கு ஆண்டு காலம் பெப்ரவரி 23 இல்தான் வருகின்றது.

தற்போது தலைவர் குறிப்பிடும் குறுகிய காலமும் அதற்குப் பொருத்தமாகவே அமைகிறது. எனவே, தனது 'மஹிந்த சிந்தனை'யில் தாம் கூறியபடி - சிங்களத்திடம் தாம் உறுதியளித்தபடி - அடுத்த மூன்று மாதத்துக்குள் தீர்க்கமான ஒரு முடிவுக்குத் தாம் வந்து, திட்டவட்டமான யோசனைகளோடு, புலிகளுடன் பேசுவதற்கு புதிய ஜனாதிபதி தயாராக வேண்டும்.

இல்லையேல், தலைவர் பிரபாகரன் கூறியமைபோல தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டம் - தமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தமிழரின் தேசச் சுதந்திரப் போராட்டம் - அடுத்த ஆண்டில் தீவிரமாகும். அதற்கு இடமளிப்பாராயின், இணக்கத் தீர்வுக்கான பொன்னான வாய்ப்பை - அருமையான சந்தர்ப்பத்தை - தவறவிட்டவராவார் புதிய ஜனாதிபதி மஹிந்த.

# பிரபாவின் உரைமூலம் அரசுக்கு இறுதிவாய்ப்பு சரியான பக்கம் சிந்திப்பது மஹிந்தவின் பொறுப்பு

## மலையக மக்கள் முன்னணி அறிக்கை

கொழும்பு,நவ.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உரைமூலம் அரசுக்கு இறுதிவாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அழுத்தங்களால் இதனை உதாசீனப்படுத்துவதும், மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு சரியான பக்கம் சிந்திப்பதும் ஜனாதிபதியின் கைகளிலேயே தங்கியுள்ளது.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணி, மலையகத் தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தன்று தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரை தொடர்பாக விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் தீர்க்கமாக சிந்திக்க வைக்கின்றது.

இலங்கையின் சகல அரசாங்கங்களும் தாங்கள் எவ்விதத்திலும் நியாயப் படுத்திக்கொள்ள முடியாத அளவு வரலாற்றுப் பக்கங்கள் உலகத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளன.

இவ்விவகாரத்தில் அக்கறை காட்டும் உலகசக்திகள் இந்தக் கொதி நிலையை அசட்டை செய்தால் மனிதாபிமானத்திலும் அடிப்படை மனித உரிமையிலும் அக்கறை காட்டாத - ஓர் இனத்துக்கு எதிரான சதித்தனமான வஞ்சக நடவடிக்கைகளுக்கு இவர்களும் சேர்ந்து துணை போனதாகவே ஆகிவிடும்.

இத்தகைய போக்கை உலகம் தொடருமானால் ஓர் இனமே துடிதுடித்து மடிவதை வேடிக்கை பார்க்கின்ற கொடூரமான நிகழ்வாகவே அது அமையும்.

பிரபாகரனின்உரையின்மூலம்அரசுக்கு இறுதிவாய்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது.

அரசியல் அழுத்தங்களினால் இதனை உதாசீனப்படுத்துவதும், மக்களின் நலனுக்காக இந்த சவாலை ஏற்றுக் கொண்டு சரியான பக்கம் சிந்திப்பதும் ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளது.

ஆட்சியாளர்களின் அசட்டையினால் இன்னொரு யுத்தம் ஏற்படுமாயின் இதற்கு முன்பு என்றுமில்லாதவாறு முழு நாடுமே நிலை குலைந்து விடும் என்பதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசும், இந்த விவகாரத்தில் அக்கறை காட்டும் உலக நாடுகளும் உடனடியாக முடிவெடுத்து முழு வீச்சுடனும் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மிகப் பயங்கரமான ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-203)

# குடும்ப சுகாதார அலுவலர் பயிற்சி ஏப்ரல் மாதத்துடன் நிறைவு பெறும்

## *அதன் பின்னரே நிரந்தர நியமனம் என அறிவிப்பு*

வலி.தென்மேற்கு,நவ.29

யாழ்.மாவட்டத்தில் மாணவ குடும்ப சுகாதார அலுவலர்களாக தற்போது பயிற்சி பெற்று வரும் 108 பேருக்குமான பயிற்சிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிவடையும் என்றும்-

அதன் பின்னரே தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும்- யாழ்.சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 108 பேருக்கும் யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தற்போது வெளிக்கள பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இந்தப் பயிற்சி முடிவடைந்து விடும். அதன் பிறகு நடத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தி பெறுபவர்களுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நிலவிவரும் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும்- அறியப்படுகின்றது. (எ-135)

# பரீட்சை நிலைய அலுவலர்களுக்கு டிசெ.3, 4 இல் அறிவுறுத்தல் கூட்டம்

அச்சுவேலி,நவ.29

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபடவுள்ள இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் உட்பட அனைத்துத் தரத்தையும் சேர்ந்த அதிகாரிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 3ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

3ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கோப்பாய், வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வலிகாமம், தீவகம், தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டு அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர். கடமைக்கு நியமிக்கப்பட்டவர்களை தவறாது கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ. சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-11)

### எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு வீரசிங்கம் மண்டபத்தில் விசேட நிகழ்வு

உலக எய்ட்ஸ் தினத்தினை முன்னிட்டு யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யுனிசெவ் நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ரவிராஜ், உலக சுகாதாரத் திணைக்கள ஆலோசகர் என்.சிவராஜ் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்வாக உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு மற்றும் கலாசார நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (எ-190)

### நாளை

**கார்த்திகை 15**
**புதன்கிழமை**
**30.11.2005**
**திதி: சதுர்த்தி**
**முன்னிரவு 09.51 வரை**
**நட்சத்திரம்: விசாகம்**
**முன்னிரவு 11.35 வரை**
**சுபநேரம்: 04.44- 06.14**
**ராகுகாலம்: 12.14- 01.44**
**(யாவும் பழைய நேரப்படி)**

# சுந்தர ராமசாமியின் நினைவு அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.29

இந்தியாவின் மிகச்சிறந்த தமிழ் இலக்கியப் படைப்பாளியும் விமர்சகருமான சுந்தர ராமசாமியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

புவியியல்துறை மண்டபத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

கலாநிதி ம.இரகுநாதன் மற்றும் எழுத்தாளர்கள் க.சட்டநாதன், அ.யேசுராசா ஆகியோர் நினைவுரைகளை ஆற்றவுள்ளனர். (ஐ)

# பண்டத்தரிப்பு மகப்பேற்று விடுதியை இயங்க வைக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,நவ.29

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்று நிலையத்தையும் ஆண், பெண் விடுதிகளையும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதுவிடயமாக, மேற்படி சங்கம் சார்பில் அதன் செயலாளர் இ.தங்கராசா, யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்று நிலையமும் ஆண், பெண் விடுதிகளும் திறந்து வைக்கப்பட்டு ஒரு வருட காலமாகியும் இதுவரை இயங்காமல் இருந்து வருகின்றன.

மாதகல் பகுதி மக்களும் சிகிச்சை பெறச் செல்லும் இந்த வைத்தியசாலையின் மகப்பேற்று நிலையத்தையும் (பிரசவவிடுதி) மற்றும் ஆண், பெண் விடுதிகளையும் இயங்கச் செய்வதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

கடந்த யுத்த கால அனர்த்தங்களின் போது தரைமட்டமான இந்த வைத்தியசாலைக் கட்டடங்கள் யாவும் ''றான்'' திட்டத்தின் கீழ் அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக் கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நவம் பர் மாதம் 29 ஆம் திகதியன்று இந்த வைத்தியசாலையின் மகப்பேற்று நிலையம் மற்றும் ஆண், பெண் விடுதிகள் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளராக அப்போது கடமையாற்றிய டாக்டர் இ.தெய்வேந்திரனால் திறந்து வைக்கப்பட்டன.

ஆனால், இன்றுவரை இவை இயங்காமல் இருந்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதேவேளை - பிரசவ விடுதியும் ஏனைய விடுதிகளையும் இயங்கச் செய் வதற்குத் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களையும் தளபாடங்களையும் கட்டில், மெத்தைகளையும் சுகாதார திணைக்களம் இந்த வைத்திய சாலைக்கு ஏற்கனவே வழங்கியுள்ளதாக அறிகின்றோம்.

இதேவேளை - சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட வைத்திய அதிகாரியின் உத்தியோக பூர்வ வசிப்பிடக் கட்டடமும் இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

ஆகவே, தயவு கூர்ந்து இந்த மகப்பேற்று நிலையத்தையும் மற்றும் ஆண், பெண் விடுதிகளையும் விரைவில் இயங்கச்செய்வதற்கு ஆவன செய்யுமாறு எமது சங்கம் தங்களை வேண்டிக் கொள்கின்றது

- இவ்வாறு மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-135)

### உதயவாக்கு

**கவலையென்ற பெருமழையைத் தடுக்க நம்பிக்கை என்ற குடைதான் உதவும்.**

*யாரோ.*

# கேள்வி அறிவித்தல் -2006

**யாழ்ப்பாணம் - மாநகர சபை**

**நகரவீதியில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கு தரிப்புக் கட்டணம் அறவீடு செய்தல்**

பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான வரி அறவிடுதலை 01.01.2006 தொடக்கம் 31.12.2006 வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

*(அ)* *பருத்தித்துறை வீதி தொடக்கம் கே.கே.எஸ்.வீதி வரையிலான ஆஸ்பத்திரி வீதி.*
*(ஆ).* *நாவலர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி வரையான கஸ்தூரியார் வீதி.*
*(இ)* *ஆரியகுளம் தொடக்கம் கே.கே.எஸ்.வீதி வரையான ஸ்ரான்லி வீதி, பொன்னாலை வீதி.*
*(ஈ)* *புதிய தபால் நிலைய சந்தி தொடக்கம் மனோகரா தியேட்டர் சந்தி வரையான கே.கே.எஸ்.வீதி.*
*(உ)* *மின்சார நிலைய வீதி.*

ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வற்வரி நீங்கலாக) ரூபா 5,00,000/- இத்தொகையாகும்.

| | |
|---|---|
| மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா 500/- |
| வற்வரி 15% | ரூபா 75/- |
| மீளளிக்க கூடிய கேள்விப் பிணைப்பணம் | ரூபா 5000/- |

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி 06.12.2005ஆம் திகதி நண்பகல் 12.30 மணி வரை. கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி 06.12.2005 பிற்பகல் 2 மணி வரை. கேள்விகள் திறக்கப்படும் திகதி 06.12.2005 பிற்பகல் 3 மணி வரையில்

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**சி.வி.கே.சிவஞானம்**
ஆணையாளர்,
மாநகரசபை.

(சி-46437)(21.34.16)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



# மு.இராசலட்சுமி

*பத்துமாதம் சுமக்கவில்லை*
*பத்தியமும் இருக்கவில்லை*
*பாசத்திலே தாயாகி*
*பார்வையிலே தெய்வமாகி*
*தொண்டிலே சேவகியாகி*
*எம்மை வாழ வைத்த அம்மம்மா*
*எம் உயிர் உள்ளவரை*
*உங்களை நாம் மறவோம்*
*உங்கள் ஆத்மா அமைதியடைய*
*அம்பாளை வேண்டி நிற்கும்....*

விக்கி - மருமகன்,
கேமா - பேறாமகள்,
பேரப்பிள்ளைகள்
தாட்சாயினி, நாகதீபன், மால்மருகன்.

புகையிரத வீதி,
சுன்னாகம்.

(43295)(21.17.34)


# UNIVERSITY OF MADRAS
## சென்னை பல்கலைக்கழகம்
## INSTITUTE OF DISTANCE EDUCATION

Estd in 1856

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

**டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. Diploma Course in Management
2. Diploma Course in Accounting & Auditing
3. Diploma Course in School Management
4. Post Graduate Diploma in Public Relations

**Eligibility : Undergraduate Degree**
Duration : 1 year
**Admission Closing Date 10-12-2005**

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்

**ASIAN BUSINESS COLLEGE**
101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196


**இளம் பொருளியலாளர் மன்றம் (பொருளியற்றுறை)**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு இல. | - 4266 |
| இரண்டாம் பரிசு இல. | - 0343 |
| மூன்றாம் பரிசு இல. | - 4166 |

*ஆறுதல் பரிசில்கள்:-*

**2142, 2157, 3967, 1816, 4612, 4910, 0590, 2151, 2444, 3362**

05.12.2005 இற்கு முன்னர் தொடர்புகொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்

**இளம் பொருளியலாளர் மன்றம், பொருளியற்றுறை.**

(43304) (21.17.34)

## வெளிவாரிக் கலைமாணி பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் கலைமாணி பகுதி II-2002 இற்குரிய பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகின.

இப்பரீட்சைகள் தொடர்ந்து டிசெம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறும் என வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை-யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் இன்றுமுதல் வழங்கப்படும் என்றும்-பட்டம் பெற்ற வெளிவாரி மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிற்கு நேரில் சமுகமளித்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்-அவர் மேலும் தெரிவித்தார். (எ-12)

## பண்டத்தரிப்பிலும் கௌரவிப்பு நிகழ்வு

வலி.தென்மேற்கு, நவ.29

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை கடந்த சனிக்கிழமை நடத்தியது.

இதேவேளை- கடந்த வெள்ளிக்கிழமை சங்கப் பணியாளர்கள் பெரியவிளானிலுள்ள சங்கத்தின் தொழிற்சாலையின் சுற்றாடலை மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். சங்கப் பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ஐ-135)

## இடைக்காட்டில் நுளம்புத் தொல்லை

இடைக்காடு,நவ.29

வளலாய், இடைக்காடு பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் ஆங்காங்கே வெள்ளம் தேங்கி நிற்பதை அடுத்து நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் மலேரியாக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும்- கூறப்பட்டது. (எ-ரி-204)

## மீன்பிடியியல் டிப்ளோமா விரிவுரை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா முதலாம் அணி மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

'இலங்கையின் வரலாறும் பொதுஅறிவும்' 'தகவல் தொடர்பாடல் திறன்' ஆகியன தொடர்பாக விரிவுரைகள் இடம்பெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கா.சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார். (எ-12)

## மாதகலில் பெற்றோர் கௌரவிப்பு

வலி.தென்மேற்கு,நவ.29

மாதகல் விபுலானந்தர் படிப்பகம் அப்பகுதியிலுள்ள 12 மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடத்தியது.

படிப்பகத்தின் தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ-135)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவுகள்

எமது பாடசாலை ஆசிரியை
**பொ.விக்னேஸ்வரியின்** அன்புத் தந்தை

**அமரர் சின்னவன் பொன்னையா**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.**

*(43297)(26-17.21.34)*

## வெற்றிடங்கள்

## ஊற்று நிறுவனம்

1. **பகுதிநேர ஆசிரியர்கள் - வடமராட்சி**
   வடமராட்சி வலையத்தில் தரம் மூன்றில் இனம் காணப்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்களின் தரத்தை உயர்த்துவதற்கு தமிழ். கணிதம் கற்பிக்கக்கூடிய பகுதிநேர ஆசிரியர்கள் தேவை. G.C.E.(A/L) சித்தியடைந்த கற்பித்தல் திறமையும் ஆர்வம் உடைய இளைஞர்/ யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
2. **சமூக அணிதிரட்டாளர்கள் - வடமராட்சி**
   வேலையற்றிருக்கும் இளைஞர் / யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி பற்றி கிராமங்களுக்குச் சென்று உணர்வூட்டக் கூடிய அணிதிரட்டாளர்கள் தேவை.
   G.C.E.(A/L) சித்தியடைந்த, அர்ப்பணிப்புடன் வேலைசெய்யக் கூடிய இளைஞர் / யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
3. **இயந்திரமய தச்சுவேலைப் பயிற்சி**
   W U S C நிறுவனத்துடன் இணைந்து மேற்கூறப்பட்ட பயிற்சியை 6 மாதங்களுக்கு வடமராட்சியில் நடத்தவுள்ளோம் அதில் சேரவிரும்பும் இளைஞர் / யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
4. **திட்ட உத்தியோகத்தர்கள்**
   ஊற்று நிறுவனத் திட்டங்களில் பணியாற்றுவதற்கு பட்டதாரிகள் தேவை. முகாமைத்துவ, வணிக, சமூகவியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

*விண்ணப்பங்களை சுயவிவரக் கோவையுடன் மார்கழி 8ஆம் திகதிக்கு முன் அனுப்பவும்.*

இயக்குநர்,
ஊற்று நிறுவனம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

*(43308)(26-34.17)*

## ஏக்கமுடன் இருபத்தைந்தாம் ஆண்டு அஞ்சலிகள்

தோற்றம் 05 - 06 - 1928



மறைவு 29 - 11 - 1980

# அமரர் கந்தையா செல்லத்துரை

(முன்னாள் தலைவர், அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்கம், யாழ்.கிளை)

**உயிருக்கும் உயிராக நேசித் தெம்மை**
**உயர்வடைய வைத்தவரே! உழைக்கும் வர்க்கம்**
**உரிமைக்காய் இணைந்தொன்றாய் வேலை நிறுத்தம்**
**உலகதிரக் குதித்த அந்த ஜூலைப் போரில்**
**உறவுகளைக் குடும்பத்தை உங்கள் நலனை**
**ஓராமல் போராடி மறைந்த நாள்கள்......**
**இருபத்து ஐந்தாண்டு ஆயின் என்ன.....**
**எண்ணியெண்ணி இதயங்கள் அஞ்சலி பொழியும்**

என்றும் உங்கள்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

788A, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(43300)(21.34.17)

## மரண அறிவித்தல்

### *இராமநாதன் சந்திராதேவி*

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சந்திராதேவி நேற்று (28.11.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் (கொக்குவில் கிழக்கு) தம்பதியரின் அன்பு மரு மகளும் இராமநாதனின் அன்பு மனைவியும் சந்திரகாந்தன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இ.சந்திரகாந்தன் (சகோதரன்).**

**குப்பிளான் வடக்கு,**
**ஏழாலை.**

(43301) (24-21-34-17)

# தாம் பின்னிய சதிவலையில் தாமே சிக்கினார் ரணில்!

## லண்டன் மாவீரர் தினக் கூட்டத்தில் மதியுரைஞர் பாலசிங்கம் ஆற்றிய உரை

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் வெள்ளிக் கிழமையன்று உரையாற்றிய இலங்கை ஜனாதிபதித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்த கொள்கைகளுக்கு புலிகளின் மதியுரைஞரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் கடும் பதிலடி கொடுத்துள்ளார்.

லண்டனில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மிகப் பிரமாண்டமான பேரெழுச்சியான மாவீரர் நாள் நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். அதிலேயே அவர் இவ்வாறு பதிலடி கொடுத்தார். அதில் பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

எமது மண்ணுக்காகவும் எமது மக்களுக்காகவும் போராடி வீழ்ந்த எம் இன்னுயிர் மாவீரர்களதும் பொது மக்களதும் நினைவாக இன்று நடைபெறுகிற நிழ்ச்சியில் பங்குபற்றி உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

### பைவ் ஸ்டார் ஹோட்டல் சங்கரிக்குக் காத்திருக்கிறது

நான் இந்த மண்டபத்துக்கு வரும்போது எனது நண்பர் ஒருவர் சொன்னார். ஆனந்த சங்கரி ஐயாவும் இந்தக் கூட்டத்துக்கு வந்திருக்கிறார் என்றார். அவர் வந்திருப்பது நல்லது. ஆனால், அவரை எங்களுக்கு ஒரு முறை அறிமுகப்படுத்த வேண்டும். அவரைக் கட்டிப்பிடித்து கொஞ்சவேண்டும் போல் ஆசையாக உள்ளது.

ஆனந்தசங்கரி ஐயா கொழும்பில் சொன்னாராம். 'நான் இந்த உலகம் முழுவதும் சுற்றித் திரிகிறேன். என் சொந்த ஊர் கிளிநொச்சிக்குப் போக முடியவில்லை.' - என்று.

கிளிநொச்சிக்குப் போகமுடியவில்லை என்று அவர் ஏன் அவசரப்படுகிறார் என்பது எங்களுக்குத் தெரியும். கிளிநொச்சியில் உள்ள கிராமத்தில் இவருக்குத் தெரிந்த 2 கிழவிகள் இருக்கின்றனராம்.

இவர் அங்கு போய் உடும்பை ரசித்துத் தின்றவராம். அதனால்தான் அங்கு போக ஆசைப்படுகிறார். அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். ஐயா நீங்கள் கிளிநொச்சிக்கு எப்பவும் வரலாம். அங்கே ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டலை பொட்டம்மான் கட்டி வச்சிருக்கிறார். அங்கு நல்ல சாப்பாடு கிடைக்கும்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரை நிகழ்த்தி இருக்கிறார். அதில் பல முக்கியமான விடயங்களை அவர் கூறி இருக்கிறார்.

கடந்த வருடங்களில் நடந்த முக்கிய சம்பவங்கள், அதில் எமக்கு இயக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டங்கள், நிழல் யுத்தங்கள் எனப் பல முக்கிய விடயங்களை அவர் கூறியிருக்கிறார்.

இறுதியாக ராஜபக்ஷ பற்றியும் அவரது அரசாங்கம் பற்றியும், அவரது கொள்கைகள் பற்றியும் கூறியிருக்கிறார். எங்களது இயக்கம், நாங்கள் மேற்கொண்டு செய்ய உள்ளவை, எங்களது திட்டம், எங்களது போராட்டப் பாதை என்பன பற்றி எல்லாம் மிகவும் தெளிவாகவும் விரிவாகவும் அவர் கூறி இருக்கிறார்.

இந்த உரையில் 10, 12 முக்கிய விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன.

### சிங்கள இனம் இன்னமும் மகாவம்ச மன அமைப்பில்

சிங்கள இனம் குறித்துத் தலைவர் சொல்கிறார். சிங்கள இனம் இன்னமும் மகாவம்ச மன அமைப்பில் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

மகாவம்ச மன அமைப்பு என்று தலைவர் சொல்வது என்ன?

மகாவம்சம் என்பது புத்த மதத்தவர்களது புராணக் கதை. ஒரு புத்த பிக்குவால் எழுதப்பட்ட வரலாறு. அதில் என்ன சொல்லப்படுகிறது? புத்த பெருமான் இந்த இலங்கைத் தீவை சிங்களவர்களுக்கு - சிங்கள இனத்துக்கு - ஒரு தெய்வீகப் பூமியாக எழுதிக் கொடுத்தாராம்.

தேரவாத பௌத்தம் வளருவதற்கான ஒரு பூமி அது. சிங்களவருக்குத்தான் சொந்தம் என்று புத்தர் சொன்னாராம்.

ஆகவே, அந்தக் காலம் தொடங்கி இந்தக் காலம் வரை கிட்டத்தட்ட 2 ஆயிரம் ஆண்டுகளாக இது எங்கள் சொந்தப் பூமி என்றுதான் சிங்களவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்களவருக்கென்று பௌத்தர்களுக்குப் புத்த பெருமானால் கொடுக்கப்பட்ட பூமி. ஆகவே, இதில் மற்றவர்களுக்கு இடமில்லை என்பதுதான் அவர்கள் நினைப்பு.

தமிழர்களுக்கு இடமில்லை; வேறு ஒருவருக்கும் இடமில்லை.


இப்படியான ஒரு மகாவம்ச மன அமைப்பில் ('மைண்ட் செட்') சிங்களவர்கள் உள்ளனர்.

சிங்களவர்களுக்கு யதார்த்தம் - உண்மை - விளங்கவில்லை

அதாவது, வடக்கு- கிழக்கைத் தாயகமாகக் கொண்ட ஒரு தொன்மை வாய்ந்த இனம்- தமிழினம் -தனித்துவப் பண்பாடு, மொழி, கலாசாரம், வரலாற்றைக் கொண்டு, வடக்கு - கிழக்கில் வாழ்கின்றது என்ற உண்மையை - யதார்த்தத்தை- அன்றும் சரி, இன்றும் சரி ஏற்க அவர்கள் தயாராக இல்லை.

இந்த மகாவம்ச மன உலகத்திலிருந்து - இந்த மகாவம்ச சிந்தனையிலிருந்து - இந்தப் புராணக் கட்டுக்கதையிலிருந்து - சிங்கள தேசம் மாறப்போவது இல்லை என்கிறார் தலைவர்.

ஆகவே, சிங்கள - பௌத்த - பேரினவாதத்தின் அடிப்படைச் சித்தாந்தம் இப்படிக் கூறும்போது, தமிழரை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து, அவர்களது தாயகத்தில் சுயாட்சி உரிமையைக் கொடுக்க சிங்களவர்கள் எப்போதும் தயாராக இல்லை என்று அடித்துச் சொல்கிறார் தலைவர்.



ஒரு மதத்தினது ஆணிவேரிலிருந்து இந்தக் கருத்துலகம் வருகின்றது.

புத்தர் சொன்னாராம். புத்தர் யார்? புத்தர் ஓர் இந்து. அவர் இந்து பகுத்தறிவுவாதி. அவர் சொன்ன தத்துவம், கடவுள் இல்லை; ஆன்மாவும் இல்லை; அடுத்த உலகமும் இல்லை. கடவுளும் இல்லை என்று புரட்சிகரமான கருத்தைச் சொன்னவர் புத்தர். அவர் ஓர் இந் துத்துவ சீர்திருத்தவாதி.

கடவுள் இல்லை என்று சொன்ன தத்துவ ஞானியை - அறிவாளியை - நீ கடவுளாக வணங்குகிறாய்.

அப்படியான ஒரு கடவுள் இந்தத் தீவைத் தமக்கு எழுதிவைத்து விட்டுப் போனார் எனச் சிங்களவர் நம்புகின்றனர். அப்படியானால், சிங்களவரின் 'மேல்மாடியில்' ஒன்றும் இல்லை. இப்படியான ஆட்களுடன் போய் எப்படிப் பேசுவது?

இதைத்தான் தலைவர் சொல்கிறார்.

### பேச்சுக்கு ஏன் போனோம்?

சரி. அப்படியானால் - பேசிப் பயனில்லை என்றால் - சிங்கள அரசாங்கத்துடன் பேசிப் பயனில்லை என்று சொன்னால் - பேசித் தீர்வைத் தரப்போவதில்லை என்று சொன்னால் - அப்படி ஏன் பேச்சுவார்த்தைக்குப் போனீர்கள்? ஏன் பாலசிங்கத்தை அனுப்பினீர்கள்? இதற்கும் விளக்கம் கூறுகிறார் தலைவர்.

நாங்கள் பேச்சுவார்த்தைக்குப் போனமைக்கு உலகத்தினது நிர்ப்பந்தம் காரணம் என்கிறார்.

ஒரு காலகட்டத்தில் இந்தியா தலையிட்டபோது, இந்தியாவின் அழுத்தம் - நெருக்குவாரம் - காரணமாகப் பேச்சுவார்த்தைக்குப் போனோம். திம்பு, பெங்களூர், டில்லிக்கு பேச்சுவார்த்தைக்குப் போனோம். இந்தியாவினது நிர்ப்பந்தங்களுக்குக் கீழ் பேச்சுக்குப் போகவேண்டிய கட்டாயம் வந்தது.

நானும், தலைவர் பிரபாகரனும் இந்தியாவில் இருக்கும்போது இப்படியான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. எங்களுக்குத் தெரியும், இப்படியான பேச்சுகளில் பேசிப் பயனில்லை. ஆனால், இந்தியாக்காரர் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டு சொன்னார்கள். 'போய்ப் பேசு' என்றார்கள்.

அடுத்தது, சர்வதேச உலகத்தினது நிர்ப்பந்தங்கள். தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ரணிலோடு பேசினோம். இதற்கு சர்வதேச உலகத்தினது அழுத்தம் காரணம். சரி என்று பேசினோம்.

நாங்கள் பேசியதற்குக் காரணம் என்ன என்று தலைவர் சொல்கிறார்.

தமிழீழ விடுதலைப்ப புலிகள் இயக்கம் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் சர்வதேச அங்கீகாரம் பெற வேண்டும். எமது இயக்கத்துக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் பெற வேண்டும். எமது மக்களினது பிரச்சினையை - எமது மக்களினது போராட்டத்தை - உலக் அரங்கில் அறிமுகப்படுத்தப் போனோம் என்று தலைவர் சொல்லியுள்ளார்.

அடுத்து தமிழ்மக்களுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் அவர்களது தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான - நியாயமான - தீர்வைத் தரமாட்டார்கள் என்பதை உலகத்துக்கு நிருபித்துக் காட்டவும் பேச்சுக்குப் போனோம் என்கிறார் தலைவர். அது உண்மைதான்.

நாங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றோம். வெளிநாட்டுப் பத்திரிகை உலகத்தைச் சந்தித்தோம். ஏன் இந்தப் பேச்சு நடைபெறுகிறது?, எங்கள் மக்களின் பிரச்சினைகள் என்ன?, கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினை ஏன் இழுபட்டுக் கிடக்கிறது? - என்பவற்றைத் தெரியப்படுத்தினோம்.

ஒரு பக்கம் பேச்சுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம். மறுபுறம் எங்களுக்கும் தேவை.

சண்டையை விட பேச்சுக்கள்தான் சிக்கல். சண்டையில் நேரடியாக எதிரியை மோதி அழித்து சாதனைகள் நிகழ்த்தலாம், அதைச் செய்துள்ளோம்.

ஆனால், பேச்சு என்பது வித்தியாசமான போராட்டம். அங்கே பொறிகள் இருக்கும். சதி வலைப் பின்னல்கள் இருக்கும்.

என்ன மாதிரி பாலசிங்கத்தை மடக்கலாம், புலிகளை என்ன மாதிரி அவர்களது இலட்சியத்திலிருந்து திருப்பி வேறு பாதை யில் கொண்டுபோகலாம் என்று சதிகள் இருக்கும். இவைகளுக்கு முகம்கொடுக்கவேண்டும். பேச்சுவார்த்தை என்றால் சாதாரண விடயம் அல்ல. சிங்கள எதிரி தங்களிடம் உள்ள சிறந்த சாணக்கியர்கள், சிறந்த அறிவுஜீவிகள், பெரிய படிப்பாளர்கள், சட்டமேதைகளை அனுப்புவார்கள். மிகவும் நுட்பமாக, தந்திரமாக, சாணக்கியமாகக் கையாள வேண்டும். இல்லையென்றால் தொலைந்தோம். அப்படியிருந்தும் சில சமயங்களில் நெருக்குதல்களுக்கு நாங்கள் ஆளாயிகிருக்கிறோம்.

### இந்தியாவுடன் நடந்த பேச்சு விவகாரம்

இந்தியாவுடன் நடந்த பேச்சு உதாரணம்.

ஜெயவர்த்தனவுடன் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் செய்கிறார். மாகாணசபை என்ற அப்ப, சப்பை அதிகாரத்துடன் உள்ள திட்டம் அது. அதைச் செய்துவிட்டு ஆயுதங்களைப் போடு என்றார்கள். நாம் ஆயுதங்களைக் கொடுத்தோம். மாகாண சபையை ஏற்க மறுத்தோம். அதன் பிறகு என்ன நடந்தது? எங்களை அழிக்க இந்திய இராணுவத்தை ஏவிவிட்டது இந்திய அரசு.

அப்போது எங்களது இலட்சியத்துக்காக - எங்களது மக்கள் நலனைப் பேணுவதற்காக - அந்த பெரிய வல்லரசையும் எதிர்த்தோம். நாங்கள் ஒரு சிறிய விடுதலை இயக்கமாக இருந்தும் பெரிய வல்லரசை எதிர்த்துப் போராடிய வரலாறு உங்களுக்குத் தெரியும். (மக்கள் பலத்த கை தட்டல்)

எங்களது இயக்கம் அழிந்தாலும் சரி, போராளிகள் அழிந்தாலும் சரி, நாங்கள் கொண்ட இலட்சியத்துக்காக, மக்களைக் காப்பாற்ற எந்தச் சக்தியையும் எதிர்கொள்ளத் தயார் என்று பிரபாகரன் உலகுக்கு உணர்த்தினார். (கைதட்டல் அடங்கவில்லை)

### ரணிலின் சதிவலை

ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பர் மிலிந்த மொரகொட. முந்திய அரசாங்கத்தில் பொருளாதார சீர்திருத்த அமைச்சர். பேச்சுகளில் பங்கேற்றவர். அவர் தேர்தலுக்கு முன்னதாக ஒரு அறிக்கை வெளியிட்டார்.

நாங்கள் புலிகளைப் பேச்சுகளுக்கு இழுத்துக்கொண்டுபோய் உலக நாடுகளைக் காட்டி இழுத்தடிச்சு கடைசியாக ஒன்றும் கொடுக்காமல் விட்டுவிட்டோம் என்றார்.

சதிவலைக்குள் அவர்களை மாட்டிவிட்டோம். இதனால், புலிகள் இயக்கம் உடைந்தது. அந்த இயக்கத்திலிருந்து ஒருவர் இயக்கத்தை விட்டு வெளியேறி, இன்னொரு அமைப்பை உருவாக்கினார் - என்று கூறுகிறார். அந்த அவர் யார் என்பது உங்களுக்குத் தெரியும்.

ரணில் விக்கிரமசிங்க அரசு எங்களைப் பேச்சுகளுக்குக் கொண்டுபோனது. 'காட்டுக்குள்ளே காய்ந்து போய் இவங்கள் கிடக்கிறாங்கள். மேற்குலக நாடுகளின் நாகரீகத்தைக் காட்டினால் இவர்கள் போராட்டத்தை விட்டு ஓடிவிடுவார்கள்' என்று நினைத்தார்கள். பேச்சுக்கு நான்தான் தலைமை வகித்தேன்.

தாய்லாந்தில் பேச்சு நடக்கிறது. முக்கியமாக நானும் பீரிஸூம்தான் 'பெடரல்'பற்றி இடறல் பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், எங்களுடன் வந்த பெடியள் பின்னேரம் என்றால் கிளம்பிவிடுவார்கள். எங்க போகிறார்கள் என்று பார்த்தால் இரவுதான் வருவார்கள். இப்படி 'சொப்பிங்' போன ஒரு ஆள் குழம்பிவிட்டார். பெண்களிடம் மயங்கி, குழம்பிய அவர் என்ன செய்திருக்க வேண்டும்? இயக்கத்திலிருந்து விலகிப்போய் பாலியல் இயக்கத்தை ஆரம்பித்திருக்கலாம்.

தேர்தலுக்கு முன்பாக மிலிந்த மொறகொட சொல்கிறார். புலிகளுக்கு வெளிநாடுகளைக் காட்டி, புலிகள் அமைப்பை உடைத்து, ஒரு தளபதியை வெளியிலெடுத்து, சாதனை படைத்துவிட்டோம் என்கிறார்; சதிவலை பின்னப்பட்டது என்றார். நாங்கள் ஏற்கனவே இந்தப் பேச்சுகளின் சதிவலைப் பின்னல்கள், எந்த மாதிரி எங் களை வீழ்த்துவார்கள் என்ற சூத்திரம் எல்லாம் தெரிந்தும் பேச்சுகளுக்குப் போனோம்.

ஆகவே, இப்படியான சவால்களுக்கு முகம்கொடுத்து சாணக்கியமாகக் காய்களை நகர்த்தி இதிலிருந்து தப்பி வந்திருக்கிறோம்.

30வருட போராட்டத்தில் இடையிடையே போர்நிறுத்தம், பேச்சுகள் நடைபெற்றுள்ளன. ஒரு கட்டத்தில் இந்தியாவின் அழுத்தம், இன்னொரு கட்டத்தில் சர்வதேசத்தின் அழுத்தம்.

### போர் நிறுத்தப் பிரகடனம் பலத்தில் நின்று செய்தோம்

ஆனால், தலைவர் சொல்கிறார், கடைசியாக நடந்த பேச்சு 4 ஆண்டுகாலமாக இழுபட்டுக்கொண்டிருக்கிறது என்கிறார்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தலைவர்தான் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தினார். அது வெறும் பிரகடனம் அல்ல. பலத்தில் நின்றுகொண்டுதான் அந்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

என்ன பலம்?

வன்னி மாநிலம் முழுக்க நாங்கள் பிடித்து, ஆனையிறவு படைத்தளத்தைத் துவம்சம் செய்து, இராணுவ சமநிலையை எங்களுக்குச் சாதகமாக நிலைநாட்டி, பலத்தின் அத்திவாரத்தில் நின்று நேசக்கரம் நீட்டினோம் எனத் தலைவர் சொல்கிறார்.

அன்று தொடங்கிய பேச்சு 4 ஆண்டு காலமாக இழுபடுகிறது. இந்தப் பேச்சு ரணிலுடன் 6 கட்டமாக நடந் தது. நோர்வே, ஜேர்மன், தாய்லாந்து, ஜப்பான் என நானும் இழுபட்டுத் திரிந்தேன்.

ரணிலின் ஆட்சி போய் சந்திரிகாவின் ஆட்சி வந்தது. சந்திரிகாவுடன் பேசினோம்.

இப்படியெலாம் பேசியும் இந்த 4 ஆண்டு காலமாக எடுத்த முடிவுகள், பெற்ற தீர்மானங்கள், செய்து கொண்ட ஒப்பந்தங்கள் ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை.

சர்வதேச சதி வலைப் பின்னல் பற்றிச் சொல்ல வேண்டும். இது என்ன மாதிரி பின்னப்பட்டது? இந்தப் பேச்சுகளை சர்வதேச வல்லரசுகளை உள்ளடக்கியதாக விரிவாக்கம் செய்தமை என்பதுதான் சதி.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் போன்றவைகளை இழுத்துத் தாங்களாகத் தீர்மானம் போட்டு, இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டும், என்று எங்கள் மீது அழுத்தம் கொடுக்க நினைத்தார்கள்.

இங்கே 2 பேருக்கு மத்தியில்தான் பேச்சு. நோர்வேயை மத்தியஸ்தராக ஏற்றுக் கொண்டு நடத்துகிறோம். ஆனால் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப் பிய ஒன்றியம் எல்லோரும் மேசையில் அமர்ந்து அதைச் செய், இதைச் செய்ய என்று கட்டளை-போடத் தொடங்கினார்கள்.


எங்களது மக்களின் பிரச்சினையை எங்கள் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். உலகம் தீர்மானிக்க முடியாது. ஆனால், உலகம் சொல்கிறது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு, இறையாண்மையை மீறக்கூடாது, தனியரசு அமைக்கக்கூடாது, இப்படியான அழுத்தங்கள். சர்வதேச உலகம் நெருக்குவாரங்கள் போட்டு எங்களுடைய ஆயுதங்களைக் களையும் திட்டம்தான் சதிவலை என்று சொல்கிறோம்.

இந்தச் சதிவலையைக் கொண்டுவந்தார் ரணில். கடைசியாக இந்தச் சதி வலையில் சிக்கியது ரணில்தான். நாங்கள் நிற்கிறோம். (மக்கள் கைதட்டல்). (11ஆம் பக்கம் பார்க்க)















முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர் நினைவு நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட முக்கிய தளபதிகளை இரண்டாவது படத்திலும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதை ஏனைய படங்களிலும் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)







மாவீரர் தினமான நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக் கடற்கரையில், பொதுச்சுடர் ஏற்றுவதற்கென அமைக்கப்பட்ட மேடையை முதற்படத்திலும் பிரதான சுடரைத் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் கடலில் கடற்புலிகளின் விசேட படகு அணிவகுப்பு மரியாதை செலுத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# மாவீரர் மறவன் மாஸ்டர் நினைவாக பாரம்பரிய ஆக்கத்திறன் போட்டிகள்

புதுக்குடியிருப்பு,நவ.29

கடற்புலிகளின் முக்கிய உறுப்பினரான லெப்.கேணல் மறவன் ஆசிரியரின் நினைவாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரி பாரம்பரிய ஆக்கத்திறன் போட்டிகளை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கரகம், காவடி, கோலாட்டம், இசையும் அசைவும் ஆகிய பாரம்பரிய போட்டிகளில் தனியாகவோ அல்லது குழுவாகவோ பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 'லெப்.கேணல் மறவன் ஆசிரியர் நினைவுப் போட்டி, நுண்கலைக் கல்லூரி' என்ற முகவரிக்குப் புதுக்குடியிருப்பு, மல்லாவி, முள்ளியவளை ஆகிய இடங்களில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் -

தெரிவுசெய்யப்படும் முதல் 3 வெற்றியாளர்களுக்கு சமாசம் பெறுமதியான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளது எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-353-202)

# 'இனிய வாழ்வு' இல்லத்தில் நடந்த வெள்ளைப்பிரம்பு தின வைபவம்

புதுக்குடியிருப்பு,நவ.29

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தினரின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

கடந்த 19 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியைக் கழகத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் நீகன் ஏற்றிவைத்தார். இல்லக்கொடியை இல்லத்தின் இயக்குநர் திருமதி இரா.காந்தி ஏற்றினார். தொடர்ந்து இல்ல இயக்குநர் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஆசியுரையை இந்து மத அபிவிருத்தித் திட்ட உதவியாளர் மோகனும் சிறப்புரையை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-353-202)

# பெரும்போக நெற்செய்கை கிளிநொச்சியில் பேரழிவு

பரந்தன்,நவ.29

அண்மைய நாள்களாகப் பெய்துவரும் கனமழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்போகப் பயிர்ச்செய்கை பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கருத்துத் தெரிவிக்கையில் -

நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 2005-2006 பெரும்போகத்தில் பரவலாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது மழையால் அது முற்றாக அழிந்துள்ளது. மானாவாரி நெற்செய்கை 6 ஆயிரத்து 800 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டது. இதில் 3 ஆயிரம் ஹெக்டேயரில் முழுமையாக அழிந்துள்ளது. கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகமான அழிவு ஏற்பட்டுள்ளது.

மேட்டு நிலங்களில் 600 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள் என்பனவும் முற்றாக அழிந்துள்ளன - என்றார் அரச அதிபர். (ஐ-352-202)

## தென்னங்கன்று விநியோகம்

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 600 பேருக்கு தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளது.

புளியங்குளம், நெடுங்கேணி, கனகராயன்குளம், நயினாமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்தத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-352-202)

# இராமநாதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பஸ் சேவை

இராமநாதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்குப் புதிய பஸ் சேவை ஒன்றைத் தமிழீழ போக்குவரத்துக்கழகம் ஆரம்பித்துள்ளது.

இராமநாதபுரம், வட்டக்கச்சிப் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த சனிக்கிழமை தொடக்கம் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கழகத்தின் கிளிநொச்சி நகர பேருந்துப் பகுதி முகாமையாளர் தெரிவித்தார்.

புதிய பஸ் சேவை தினமும் காலை 7.30 மணிக்கு இராமநாதபுரத்தில் ஆரம்பித்து 7.45 மணிக்கு வட்டக்கச்சியைச் சென்றடைந்து மீண்டும் 8.15 மணிக்கு அங்கிருந்து கிளிநொச்சி சென்றடையும்.

அதேபோன்று மாலை 5 மணிக்கு கிளிநொச்சியில் ஆரம்பமாகி 5.30 மணிக்கு வட்டக்கச்சியை அடைந்து மீண்டும் 5.45 மணிக்கு இராமநாதபுரத்தைச் சென்றடையும். (ஐ-405-202)




## புளியங்குளத்தில் சிரமதானப் பணி

புளியங்குளம்,நவ.29

நடைபெற்றுமுடிந்துள்ள தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி புளியங்குளம் ஆயப் பகுதியினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். ஆயப்பகுதிப் பொறுப்பாளர் செம்மல் தலைமையில் புளியங்குளம் பிரதேச வைத்தியசாலை, புளியங்குளம் இந்துக் கல்லூரி ஆகிய பகுதிகளில் சிரமதானப் பணி இடம்பெற்றது.(ஐ-355-202)

## விஞ்ஞானகுளத்தில் சுயதொழில் கடன்

ஒட்டுசுட்டான்,நவ.29

டெனிஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினால் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டம் விஞ்ஞானகுளத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு முதலாம் கட்ட சுழற்சிமுறைக் கடன்திட்டமாக பயனாளிகளுக்குச் சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுமார் 2 லட்சத்து பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நெடுங்கேணி புனர்வாழ்வு அபிவிருத்தி இயக்குநர் சபைத் தலைவர், திட்ட இணைப்பாளர், சமூக வலுவூட்டாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், கடன் அனுமதிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர். (ஐ-341)

# கால்நடை அதிகாரி அலுவலகத்துக்கு பண்ணையில் விரைவில் புதிய கட்டடம்

வலி.கிழக்கு,நவ.29

பண்ணைப் பகுதியில் கால்நடை வைத்தியஅதிகாரி அலுவலகத்துக்குப் புதிய கட்டடம் நிறுவப்படவுள்ளது.

'நிக்கொட்' வேலைத் திட்டத்தின் கீழ் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அங்கு நிறுவப்படும்.

யாழ்.மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகக் கட்டடம் முன்னர் பண்ணைப் பகுதியில் இயங்கிவந்தது.

யாழ். கோட்டைச் சமரின்போது அந்தக் கட்டடம் அடியோடு இடிந்து தரைமட்டமாகியது.

தற்போது அதேஇடத்தில் மீண்டும் புதிய கட்டடத்தை நிறுவ முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் -

கட்டட வேலைகள் விரைவில் தொடங்கப்படும் எனவும் -

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வைத்திய பொறுப்பதிகாரி பொ.இராமநாதன் தெரிவித்தார். (ஐ-180)

## வாழைக்குலைச் சங்கத்துக்கு ஐ.நா. உதவியில் பார ஊர்தி


வலி.கிழக்கு,நவ.29

வலி.கிழக்கு வாழைக்குலைச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிப்பதற்காக பார ஊர்தி ஒன்று வழங்கப்படவுள்ளது.

சுமார் 28 லட்சம் ரூபா பெறுமதியான இந்தப் பார ஊர்தியை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் வழங்கவுள்ளது.

வாழைக்குலைகள் சந்தைப்படுத்துவதில் சங்கம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளைக் கவனத்திற்கொண்டே இந்தப் பார ஊர்தியை வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஐ.நா. அபிருத்தித் திட்ட நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)



சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் நடத்தப்பட்ட புற்று நோய் சிகிச்சை நிகழ்வின்போது வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன் நோயாளி ஒருவரைப் பரிசோதனை செய்வதைப் படத்தில் காணலாம். (படம்: சங்கானைச் செய்தியாளர்)

# ஆவரங்காலில் ஒரே இரவில் 2 ஆலயங்களில் திருட்டு!

அச்சுவேலி,நவ.29

ஆவரங்கால் பகுதியில் உள்ள இரண்டு ஆலயங்களில் ஒரே இரவில் பெறுமதிமிக்க பொருள்கள் திருட்டுப்போயுள்ளன.

ஆவரங்கால் சிவன் கோயில், ஆவரங்கால் கன்னாரை அம்மன் கோயில் ஆகியவற்றிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலயங்களிலிருந்த பெறுமதிமிக்க நகைகள் , தெய்வங்களுக்கு சாத்தும் அங்கிகள் என்பனவே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன.

கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து அச்சுவேலி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-11)

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் அதிகாரிகள் குழு இன்று வருகை

வலி.கிழக்கு,நவ.29

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எஸ்.அபுசலீம் உட்பட மூவர் அடங்கிய குழு இன்று யாழ்ப்பாணம் வருகைதந்து அரச அதிபர் கே. கணேஸைச் சந்தித்துப் பேச உள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இந்தக் குழுவினர் இங்கு ஆராய்வர் என்று ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் கூறினார். (ஐ-180)

# வலி.கிழக்கில் ஜி.ரி.இசற் உதவியுடன் 60 வீடுகள் விரைவில் நிர்மாணம்

வலி.கிழக்கு,நவ.29

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வசதி குறைந்த சொந்த காணிகள்உள்ள 60 குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா செலவில் ஜி.ரி.இசற் நிறுவனம் வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.பிரதேச செயலக உதவித் திட்டமிடல்பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

வீடமைப்புக்கான பயனாளிகள் தெரிவில் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, விதவைக் குடும்பங்கள் மற்றும் ஊனமுற்றோர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உரும்பிராய்வடக்கு, உரும்பிராய் மேற்கு, புத்தூர் வடக்கு, நீர்வேலி வடக்கு, பத்தமேனி, அச்சுவேலி தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கே இந்த வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)

## மண்டைதீவில் வீதிகள் சேதம்

மண்டைதீவுப் பகுதியில்தொடர்ந்து பெய்தமழையை அடுத்து அங்குள்ள வீதிகள் பலத்தசேதம் அடைந்துள்ளன.

மண்டைதீவிலுள்ள வீதிகள் ஏற்கனவே பாவனைக்கு உகந்த வகையில்அமைந்திருக்கவில்லை.இந்த நிலையில் தற்போது பெய்த மழை இந்த வீதிகளை மேலும் சேதமாக்கியுள்ளது.

மண்டைதீவு பிரதான வீதி சிறிதும் பெரிதுமான கடல் ஓடைகளை ஊடறுத்துச் செல்கிறது. இந்த ஓடைகள் மாரிகாலத்தில் வீதியை மேவிப் பாய்வதால் பிரதான வீதி போக்குவரத்திற்குத் தகுதியற்றதாக மாறி விடுகிறது.

இதேவேளை- கடல் ஓடை ஒன்றிலுள்ள மதகு ஒன்று எப்பொழுதும் கடலுடன் அள்ளுப்பட்டுச் சென்றுவிடும் நிலையில் உள்ளது. (எ-88)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.29

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''ஆனந்த ஒளி வீசும் அண்ணாமலை'' எனும் தலைப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தியின் சொற்பொழிவு இடம்பெறும். (எ-173)

# வெள்ளம் தேங்கி நிற்பதால் வரணி வயல்களிலும் பயிரழிவு

வரணி,நவ.29

வரணிப் பிரதேசத்தில் திக்கில் , திம்புருவில் வயல்வெளி ஆகியவற்றில் நெற்பயிர்கள் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளன.

திக்கில் மற்றும் திம்புருவில் வயல் வெளியூடாக அமைந்துள்ள வாய்க்கால்கள் பல வருடங்களாக புனரமைக்கப்படாமையே மேலதிக வெள்ளநீர் பாயமுடியாத நிலையில் வயலில் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-மாவில் வயல் வெளியில் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துள்ளன.

பருத்தித்துறை - கொடிகாமம் 'பிரதான வீதியில் உள்ள இரண்டு பாலங்களைப் புனரமைக்கும் வகையில் இடம்பெற்றுவந்த பணிகள் பூர்த்திசெய்யப்படவில்லை.இந்த நிலையில் மேற்படி பாலம் ஒன்றுக்கு அருகில் தற்காலிக பாதை ஒன்று நிறுவப் பட்டது. இதனால், அப்பகுதியூடாக வெள்ளம் பாய்ந்து செல்லமுடியாத நிலை ஏற்பட் டது.

இதுவே வெள்ளம் தேங்கி மாவில் வயல் பகுதி வயல்கள் அழியக் காரணம் எனக் கூறப்பட்டது. (எ-170)

# ஆறுநாய்கள் துரத்த வேகமாகச் செலுத்திய மோ.சைக்கிள் மற்றொரு நாயுடன் மோதி விபத்து

## இயக்கச்சியில் கடந்த வியாழனன்று சம்பவம்

தென்மராட்சி, நவ.29

ஆறு நாய்கள் துரத்தி வந்ததை அடுத்து வேகமாகச் செலுத்தப்பட்டமோட்டார் சைக்கிள் வீதியின்குறுக்கே வந்த மற்றொரு நாயுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி தூக்கிவீசப்பட்டுப் படுகாயம் அடைந்தார்.

கடந்த வியாழனன்று வன்னிப் பகுதியிலிருந்து பொருள்களை ஏற்றிவந்தபோது இயக்கச்சியில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த பீ.சக்திகுமார் (வயது -26) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை- சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் நாய் துரத்தியபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து டச்சு வீதியில் வந்த வாகனத்துடன் மோதியது.

கடந்த வெள்ளியன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கே.கிருஸ்ணானந்தன் (வயது -20) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (எ-117)

# வலி.கிழக்கில் கனத்தமழை, காற்று; குலைகளுடன் பாறிவீழ்ந்த வாழைகள்

தொடர்ந்து பெய்த அடைமழை - பலத்த காற்று ஆகியவற்றால் வலிகாமம் கிழக்கில் வாழைமரங்கள் பலவும் முறிந்துள்ளன. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, வாழைமரங்கள் பலவும் குலையுடன் பாறி வீழ்ந்து முறிந்துள்ளதாகவும் -

இதனால், தாம் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளதாகவும் - வாழைத்தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலும் கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, கரந்தன், நவக்கிரி போன்ற பகுதிகளிலேயே வாழைகளுக்கு அழிவு ஏற்பட் டுள்ளது. (எ-17)



ஜேர்மன் நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான 'டைக்கொனி' நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை மெதடிஸ்த திருச்சபை வல்வெட்டித்துறை திக்கம் பகுதியில் நிறுவிய 35 வீடுகளின் கையளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் யாழ். அரச அதிபர் க.கணேஸ் மெதடிஸ்த நகரின் வாயிலை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் டானியல் தம்பிராஜா புதிய வீடொன்றை நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் அருட்திரு. டி. அழகராஜா மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் ஆகியோர் முறையே பயனாளிகளிடம் வீடுகளின் திறப்புகளைக் கையளிப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர் சி.சுந்தரலிங்கம்)

# அறிவித்தல்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

**நடராசா கணேசலிங்கம்**
கௌரவ பொதுச் செயலாளர்,
புற்றளை சித்தி விநாயகர்
ஆலயப் பரிபாலன சபை,
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்,
புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி மற்றும்
கணையன் தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

புலோலி, புலோலி தெற்கு
புற்றளை சித்தி விநாயகர்
ஆலயப் பரிபாலன சபை சார்பாக

வழக்காளி

வழக்கிலக்கம் :*1323*/நானாவிதம்

எதிர்

**சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள்**
**தண்டபாணிகதேசிகர்**
**பிரதான குருக்கள்**
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
வல்வெட்டித்துறை.

எதிராளி

**புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் அனைவருக்கும்.**

பின்வரும் காரணங்களுக்காக மேலே கூறப்பட்ட எதிராளிக்கு எதிராக மேற்படி வழக்
காளியால் மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதாதலால் அதாவது.
அ) சிவில் நடைமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் வழக்கைத் தொடர்ந்து நடத்து
வதற்கும், ஒரு செய்திப்பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தல்
குறித்த பொருத்தமான ஒரு கட்டளையை வழங்குவதற்குமான அனுமதி.
ஆ) திருத்தப்பட்ட 1917இன் இலக்கம் 09 அறக்கட்டளை கட்டளைச்சட்டத்தின் அத்தி
யாயம் (X ) இன் நியதிகளின் பிரகாரம் புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் ஒரு பொது
சமய அறக்கட்டளையாக (தர்ம அறக்கட்டளையாக) இருந்து வருகின்றது என்ற
ஒரு பிரகடனத்தை மேற்கொள்ளல்.
இ) முறைப்பாட்டின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டவாறு 2004 ஒக்ரோபர் 03 ஆம் திகதி
நடத்தப்பட்ட புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மகாசபையினால் தெரிவுசெய்
யப்பட்ட புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் நிறைவேற்றுக் குழு
உறுப்பினர்கள் புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் உண்மையான அறங்காவலர்
களாக இருந்து வருகின்றனர் என ஒரு பிரகடனத்தை மேற்கொள்ளல்.
ஈ) பிரசித்த நொத்தாரிசு பொ.குமாரசுவாமி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட
2003 ஜூலை 5 ஆம் திகதியிடப்பட்ட இல. 9040 ஐக் கொண்ட உறுதி தவறானதும்,
செல்லுபடியற்றதுமான ஓர் உறுதியாக இருந்து வருகின்றது என்றும், அதற்கு சட்டத்
தில் எத்தகைய வலுவோ, தாக்கமோ இருந்து வரவில்லை என்றும் பிரகடனம் ஒன்றை
மேற்கொள்ளல்
உ) பிரசித்த நொத்தாரிசு பொ.குமாரசுவாமி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட
2003 ஜூலை 5 ஆம் திகதியிடப்பட்ட இல.9040 ஐக் கொண்ட உறுதியை எதிராளி
நிறைவேற்றி இருக்கமுடியாது என்றும் பிரகடனத்தை வழங்கு மாறும்.
ஊ) இடைக்கால தடைக்கான விண்ணப்பம் விசாரணை செய்யப்பட்டு, தீர்ப்பளிக்கப்படும்
வரையில் எதிராளி அல்லது அவருடைய ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்
களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து அவர்களைத் தடுக்கும் ஒரு கட்டாணை
i) புற்றளை சித்திவிநாயகர் ஆலயபரிபாலன சபையின் "X2" எனக் குறிக்கப்பட்ட
யாப்பின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் புற்றளை சித்தி
விநாயகர் ஆலய பரிபாலனசபையின் நிறைவேற்றுக் குழு நிறைவேற்றி வைப்பதற்கு
இடையூறு விளைவித்தல்.
ii) புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/ அல்லது ஆலய நிர்வாகத்தின் நட
வடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் / அல்லது அவற்றில் தலையிடுதல்.
iii) எதிராளி தன்னை பிரஸ்தாப புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களாக /
அறங்காவலராக / முகாமையாளராக / உரிமையாளராக எவரேனும் பிறிதொரு நப
ரிடம் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் / அல்லது வாக்குறுதியளித்தல் மற்றும் /
அல்லது குறிப்பிடுதல்.
(எ) வழக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படும் வரையில் எதிராளி அல்லது அவரு
டைய ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறுநபர்கள் பின்வருவனவற்றில்
ஈடுபடுவதிலிருந்து அவர்களைத் தடுக்கும் ஓர் இடைக்காலத் தடை-
i) புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் "X2" எனக் குறிக்கப்பட்ட
யாப்பின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் புற்றளை சித்தி
விநாயகர் ஆலய பரிபாலன சபையின் நிறைவேற்றுக் குழு நிறைவேற்றி வைப்பதற்கு
இடையூறு விளைவித்தல்.
ii) புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/ அல்லது ஆலய நிர்வாகத்தின் நட
வடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் / அல்லது அவற்றில் தலையிடுதல்.
iii) எதிராளி தன்னை பிரஸ்தாப புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களாக /
அறங்காவலராக / முகாமையாளராக / உரிமையாளராக எவரேனும் பிறிதொரு நப
ரிடம் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் / அல்லது வாக்குறுதியளித்தல் மற்றும் /
அல்லது குறிப்பிடுதல்.
ஏ) எதிராளி அல்லது அவருடைய ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்கள் பின்
வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து அவர்களைத் தடுக்கும் ஒரு நிரந்தரத் தடை
i) புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் "X2" எனக் குறிக்கப்பட்ட
யாப்பின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் புற்றளை
சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் நிறைவேற்றுக் கமிட்டி நிறைவேற்றி
வைப்பதற்கு இடையூறு விளைவித்தல்.
ii) புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/ அல்லது ஆலய நிர்வாகத்தின் நட
வடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் / அல்லது அவற்றில் தலையிடுதல்.
iii) எதிராளி தன்னை பிரஸ்தாப புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களாக /
அறங்காவலராக / முகாமையாளராக / உரிமையாளராக எவரேனும் பிறிதொரு நப
ரிடம் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் / அல்லது வாக்குறுதியளித்தல் மற்றும் /
அல்லது குறிப்பிடுதல்.
(...) செலவுகள் மற்றும்
...) இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கக்கூடிய வேறு ஏதேனும் நிவாரணங்கள்
புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் அனைத்து உறுப்பினர்களுக்
கும் தினசரிப்பத்திரிகைகளில் விளம்பரத்தின் மூலம் வழக்குப்பற்றிய அறிவித்தல்
கொடுக்கப்படவேண்டுமென நீதிமன்றம் 2005 நவம்பர் 24 ஆம் திகதிய கட்டளை
யின் மூலம் பணிப்புரை வழங்கியுள்ளது ஆதலால்.

இந்த அறிவித்தல் வழக்காளி மேற்படி எதிராளிக்கு எதிராக வழக்குத்தொடுத்து
இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளாரென அறிவிப்பதற்காகும். மேற்படி வழக்கு பருத்
தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதியன்று
அழைக்கப்படும்.

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி,**
**திருமதி லிங்கா துரைராஜா,**
**வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி.**

*05 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி.*

(சி-46431)(21.11.34.26)

# அறிவித்தல்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

**நடராசா கணேசலிங்கம்**
கௌரவ செயலாளர்,
புற்றளை சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை,
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்,
புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி மற்றும்
கணையன் தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

புலோலி, புலோலி தெற்கு
புற்றளை சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை சார்பாக

வழக்காளி

வழக்கிலக்கம்: *1322*/நானாவிதம்

எதிர்

**சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள்**
**ஜெயபாலசுந்தரக் குருக்கள்**
புற்றளை சித்தி விநாயகர் ஆலய வீதி,
புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.

எதிராளி

**புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவருக்கும்**

பின்வரும் காரணங்களுக்காக மேலே கூறப்பட்ட எதிராளிக்கு எதிராக மேற்படி
வழக்காளியால் மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதாதலால் அதாவது
அ) இவ்வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின்
16ஆம் பிரிவின் கீழ் அனுமதி தருமாறும் செய்தித்தாளில் அறிவித்தல் பிரசுரிப்பது
தொடர்பாக பொருத்தமானதொரு கட்டளை வழங்குமாறும்
ஆ) புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற
சொத்துக்களும் ஆலயத்தின் ஏனைய உடைமைகளும் வழக்காளியிடமும் பிராதின்
5 ஆம் பந்தியில் பெயர்ப்பட்டியலிடப்பட்டுள்ள நிருவாகசபையின் ஏனைய உறுப்பி
னர்களிடமுமே பொறுப்பிக்கப்பட்டுள்ளன என்பதொரு பிரகடனத்தை வழங்குமாறும்
இ) எதிராளியால் 2005 ஒக்ரோபர் 04ஆம் திகதி முதல் இதுவரை ஆலய அர்ச்சனை
மற்றும் பூசைகளுக்காக வசூலிக்கப்பட்ட பணத்தினதும் செலவு செய்த தொகையினதும்
விவரத்தை சமர்ப்பிக்குமாறும் மீதமுள்ள பணத்தை வழக்காளிக்கும் பிராதின் 5ஆம்
பந்தியில் பெயர்ப்பட்டியலிடப்பட்டுள்ள ஏனைய நிருவாகசபையினருக்கும் செலுத்து
மாறும் எதிராளியைப் பணிக்கும் கட்டளையொன்றை வழங்குமாறும்
ஈ) இடைக்கால தடையாணைக்கான விண்ணப்பத்தை விசாரணைசெய்து முடிவு செய்யும்
வரை எதிராளியை அத்துடன்/அல்லது அவரது பணியாள்களை அல்லது முகவர்களை
i) புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் யாப்புக்கு அமைவாக நிர்
வாக சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
ii) தட்சணை நீங்கலாக, ஆலயத்தின் நித்திய பூசைகள், திருவிழாக்கள், அர்ச்சனைகள்
ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளையும் ஆலயக் கருமங்களுக்காக வழங்கப்
படும் அன்பளிப்புகளையும் வசூலிப்பதிலிருந்தும்
iii) புற்றளை சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரோ அல்லது வழக்காளியோ
ஆலய பூசைகளுக்கென பணம் பெறுவதற்கும் நித்திய பூசைகளையும் சிறப்பு பூசை
களையும் ஒழுங்கு செய்வதற்கும் இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
iv) வழக்காளியிடம் அத்துடன்/அல்லது நிர்வாகசபையிடமன்றி பிறிதொருவரிடமாவது
ஆலயத்தின் திறவுகோல்களை கையளிப்பதிலிருந்தும்
தடை செய்யும் கட்டாணை ஒன்றை பிறப்பிக்குமாறும்
உ) இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்யப்படும்வரை எதிராளியை அத்
துடன்/அல்லது அவரது பணியாள்கள் முகவர்களை
i) புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் யாப்புக்கு அமைவாக நிர்வாக
சபை மேற்கொ. ள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
ii) தட்சணை நீங்கலாக, ஆலயத்தின் நித்திய பூசைகள், திருவிழாக்கள், அர்ச்சனைகள்
ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளையும் ஆலயக் கருமங்களுக்காக வழங்கப்படும்
அன்பளிப்புகளையும் வசூலிப்பதிலிருந்தும்:
iii) புற்றளை சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரோ அல்லது வழக்காளியோ
ஆலய பூசைகளுக்கென பணம் பெறுவதற்கும் நித்திய பூசைகளையும் சிறப்புப் பூசை
களையும் ஒழுங்கு செய்வதற்கும் இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
iv) வழக்காளியிடம் அத்துடன்/அல்லது நிர்வாக சபையிடமன்றி பிறிதொருவரிடமாவது
ஆலயத்தின் திறவுகோல்களை கையளிப்பதிலிருந்தும்
தடைசெய்யும் இடைக்கால தடையாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறும்
ஊ) எதிராளியை அத்துடன் /அல்லது அவரது பணியாள்களை முகவர்களை
i) புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் யாப்புக்கு அமைவாக நிர்வாக
சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
ii) தட்சணை நீங்கலாக, ஆலயத்தின் நித்திய பூசைகள், திருவிழாக்கள், அர்ச்சனைகள்
ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளையும் ஆலயக் கருமங்களுக்காக வழங்கப்
படும் அன்பளிப்புகளையும் வசூலிப்பதிலிருந்தும்:
iii) புற்றளை சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரோ அல்லது வழக்காளியோ
ஆலய பூசைகளுக்கென பணம் பெறுவதற்கும் நித்திய பூசைகளையும் சிறப்புப்
பூசைகளையும் ஒழுங்கு செய்வதற்கும் இடையூறு விளைவிப்பதிலிருந்தும்
iv) வழக்கா. டம் அத்துடன்/அல்லது நிர்வாகசபையிடமன்றி பிறிதொருவரிடமாவது
ஆலயத்தின் திறவுகோல்களை கையளிப்பதிலிருந்தும்
தடை செய்யும் நிரந்தர தடையாணையொன்றைப் பிறப்பிக்குமாறும்
எ) எதிரியின் வசமுள்ளதும் புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமானது
மான ஆபரணங்கள் உள்ளிட்ட ஏனைய ஆலய அனைத்து அசைவுள்ள சொத்துக்கள்
பற்றிய ஆதனப்பட்டியலொன்றை தயாரிக்கும்படி எதிராளிக்கு கட்டாயப்படுத்தும்
இடைக்கால தடையாணையொன்றை பிறப்பிக்குமாறும்
ஏ) எதிராளியின் வசமுள்ளதும் புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமானது
மான ஆபரணங்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து கோயில் சொத்துக்களை வழக்காளி
யிடம் அத்துடன்/அல்லது நிர்வாக சபையிடம் கையளிக்கும்படி எதிராளிக்கு ஒரு
கட்டாயப்படுத்தும் இடைக்கால தடையாணையைப் பிறப்பிக்குமாறும்
ஐ) வழக்குச் செலவு வழங்குமாறும்
ஒ) மன்றுக்கு பொருத்தமெனத்தென்படும் வேறு இன்னோரன்ன பிற நிவாரணங்களை
வழங்குமாறும் இறைஞ்சுகின்றார்

புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும்
தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரத்தின் மூலம் வழக்குப்பற்றிய அறிவித்தல் கொடுக்
கப்படவேண்டுமென நீதிமன்றம் 2005 நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய கட்டளையின்
மூலம் பணிப்புரை வழங்கியுள்ளது. ஆதலால்,

இந்த அறிவித்தல் வழக்காளி மேற்படி எதிராளிக்கு எதிராக வழக்குத்தொடுத்து இவ்
வழக்கை தாக்கல் செய்துள்ளாரென அறிவிப்பதற்காகும். மேற்படி வழக்கு பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றத்தில் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8ஆம் திகதியன்று அழைக்கப்படும்.

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி**
**திருமதி லிங்கா துரைராஜா**
வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி.

2005 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி

(சி-46431)(21.11.34)

# பல்துறைப் பேரறிஞர் சொக்கன்

## மூதறிஞர் சொக்கனின் நினைவு தினம் இன்று

**சொ**க்கன் என்று தமிழ் பேசும் மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட நாட்டுப் பற்றாளர் கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் அவர்கள் 02.06.1930இல் பிறந்து, சிறந்த கல்வியாளராக வளர்ந்தார்கள். கல்விச் சிறப்பும் பத்திரிகை வாசிப்பும் பதினான்கு வயதிலே (1944) அவர்களைச் சிறந்த சிறுகதை எழுத்தாளராக்கியது. அவர்கள் முதலில் எழுதிய ''தியாகம்'' என்ற சிறுகதை வீரகேசரி இதழில் வெளிவந்தது. 10.12.2004இல் அமரரான சொக்கன் அவர்கள் தொடர்ந்து அறுபது ஆண்டுகள் புகழ்பெற்ற பல்துறை எழுத்தாளராக விளங்கினார்கள்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் (ஸ்ரான்லி ம.வி.) சகபாடிகளாகப் படித்த மதுரகவி இ.நாகராசன், சோ.இராமச்சந்திர ஐயர் அவர்களும் மேல் வகுப்பில் பயின்ற த.இராஜகோபாலன் அவர்களும் தமது எழுத்துத்துறைக்கு ஊக்கிகளாகவும் உந்துசக்திகளாகவும் விளங்கியதாகவும் இதன் விளைவே முதற்சிறுகதை ''தியாகம்'' என்றும் அவர்கள் தமது மணிவிழா மலர் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இதே காலத்தில் அவர்களது தூண்டுதலால் ஒரு நாடகம் எழுதி, அவர்களோடும் உடன் மாணவிகளோடும் நடித்து, நாடகத்தை நெறிப்படுத்தி மேடையேற்றியதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பாடசாலையில் தொடர்ந்தும் இப்பணியை நிகழ்த்தினார்கள். 1948இல், பதினெட்டாவது வயதில் ''கவிஞன் பலி'' என்ற நாடகத்தை எழுதி, இலங்கை வானொலிக்கு அனுப்பித் தமது முதல் நாடகமாகப் புகழ்பெறச் செய்தார்கள். இதைத் தொடர்ந்து 1949இல் ''மலர்ப் பலி'' என்ற பெருங்கதையை (நாவல் - புதினம்) ஈழகேசரி வார இதழில் தொடர்ந்தும் வெளிவரச் செய்தார்கள். 1950 - 1951இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் ஆசிரியர் பயிற்சிபெற்ற ஆசிரியர் சொக்கன் அவர்கள் 1951 இல் ''ஆசிரியர் சமுதாயமே விழித்தெழு'' என்ற முதல் கவிதையை எழுதி ஈழகேசரியில் வெளியிட்டார்.

1952இல் வதுளை ஊவாக் கல்லூரியில் முன்னோடி ஆசிரியப் பணியை ஏற்றுக்கொண்டார்கள். 1973 வரை தொடர்ந்து ஆசிரியராகப் பணியாற்றிய சொக்கன் அவர்கள் 1973 வைகாசியில் சிலாபம் கத்தோலிக்க மகாவித்தியாலய அதிபராகப் பதவி ஏற்றார்கள். 1976 முதல் 1981 வரை கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்கள். மீண்டும் 1981 முதல் 1990 வைகாசி 31 வரை அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்கள். வதுளை ஊவாக் கல்லூரி முதல் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் வரை பதினாறு பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் சிறப்புடன் பணிபுரிந்தார்கள். இறுதிப் பாடசாலையில் இணைந்த பல பாடசாலைகளின் கொத்தணி அதிபராக உயர் பதவி பெற்றிருந்தார்கள். 1991இல் யாழ். பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார்கள்.


மயிலங்கூடலூர் **பி.நடராசன்**

மாணவர்களுக்கும் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கும் மட்டும் கற்பிப்பது அவர்கள் நோக்கமாக இருக்கவில்லை. தாமும் உயர்கல்வி பெறுவதும் அவர்கள் நோக்கமாக அமைந்தது. 1953 முதல் 1955 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தமிழ்வித்துவான் (Diploma in Tamil) பட்டம் பெற்றார். தொடர்ந்தும் தாமே உயர் கல்வி கற்று கலைமாணிப் பட்டமும் (1968), முதுகலைமாணிப் பட்டமும் (1977) பெற்றார்கள். அவர்களது அறிவையும் ஆற்றலையும் சிறப்பிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு (கௌரவ) கலாநிதிப் பட்டம் வழங்கியது (06.03.2002). இது அவர்கள் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் கிடைத்த பெருமையாகும்.

தமது 14ஆம் வயதில் (1944) வீரகேசரி இதழில் முதற்சிறுகதையை எழுதி வெளியிட்ட சொக்கன் அவர்கள் தொடர்ந்து சிறுகதை, நாடகம், நெடுங்கதை (நாவல்), கவிதை, கட்டுரை முதலிய பல்துறைகளிலும் இடையீடின்றித் தொடர்ந்து அறுபது ஆண்டுகள் (2004 வரை) எழுதி வந்தார்கள். இவ்வாக்கங்கள் ஈழத்தில் வீரகேசரி முதல் நமது ஈழநாடு வரையான நாற்பது இதழ்களிலும் தமிழகத்தில் (இந்தியா) கல்கி, கலைமகள், அக்கரை இலக்கியம் முதலிய இதழ்களிலும் வெளிவந்தன. இவற்றைவிடப் பல சிறப்பு மலர்களிலும் இவரது ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவந்தன.

ஆக்கங்களை எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றைத் தொகுத்து நூல்களாகவும் அவர்கள் வெளியிட்டு வந்தார்கள். 1958 இல் ''வீரத்தாய்'' என்ற முதல் கவிதை நூலை வெளியிட்டார்கள். நல்லூர் நான்மணிமாலை, அப்பரின் அன்புள்ளம், கவிதைக் கதம்பம், நசிகேதன், நெடும்பா - 3, முன்னேஸ்வர வடிவாம்பிகை அந்தாதி, பிள்ளைத் தமிழ் முதலிய கவிதை நூல்களும் கடல், சொக்கன் சிறுகதைகள் ஆகிய சிறுகதை நூல்களும் ஞானக்கவிஞன், செல்லும் வழி இருட்டு, சீதா, சலதி ஆகிய நெடுங்கதை நூல்களும் சிலம்பு பிறந்தது, சிங்ககிரிக்காவலன், தெய்வப் பாவை, மாருதப்பிரவல்லி, மானத்தமிழ்மறவன் ஆகிய நாடக நூல்களும் பத்திக் சந்த், போக்கிரி முயலாரின் சாகசங்கள் ஆகிய சிறுவர் நெடுங்கதைகளும் பல அறிஞர் வரலாற்று நூல்களும் பொழிப்புரைகளும் சமய இலக்கிய நூல்களும் கட்டுரை நூல்களும் ஐம்பது வரையில் வெளிவந்துள்ளன. அவர்கள் எழுதிய ''பாலையும் சோலையும்'' என்ற சொந்த நீண்ட வாழ்க்கை வரலாற்று நூலும் ''பாண்டியன் நெடுஞ்செழியன்'' என்ற சங்க இலக்கியச் சார்பு நெடுங்கதையும் (நாவல்) விரைவில் நூலாக வெளிவரவுள்ளன. வெளிவராத ஆக்கங்கள் அனைத்தும் நூல் வடிவு பெறுவது வாசகர்களுக்குத் துணை செய்வதோடு அவர்களுக்கும் பெருமை தரும்.

மாணவர் காலம் முதலே பல மன்றங்களையும் சங்கங்களையும் அமைத்துப் பதவியும் ஏற்றுப் பல பணிகளைச் சொக்கன் அவர்கள் ஆற்றினார்கள். 1959இல் யாழ். தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராகப் பணியாற்றினார்கள். 1963, 1964, 1965 இல் இலங்கைக் கம்பன் கழகம் சிறப்பாகச் செயற்பட்டது. இதன் இணைச் செயலாளர்களுள் ஒருவராகச் சொக்கன் அவர்கள் பணியாற்றிச் சிறப்பாகச் செயற்பட்டார்கள். அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றினார்கள். 1977இல் முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் உருவாக்கிப் பெரும் பணியாற்றினார்கள்.



பல அறிஞர்களின் உயர் ஆய்வு நூல்களை இக்கழகம் வெளியிட்டது. முதலில் சொக்கன் அவர்களின் முதுகலைமாணிப்பட்ட ஆய்வேடான ''ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி'' வெளிவந்தது. தொடர்ந்து பேராசிரியர்கள் நா.சுப்பிரமணியம், சு.வித்தியானந்தன், அ.சண்முகதாஸ் ஆகியோரின் நூல்களும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், முதுகலைமாணி சி.வன்னியகுலம் முதலியோரின் நூல்களையும் சொக்கன் அவர்கள் செயலாளராகப் பணியாற்றி வெளியிட்டார்கள்.

சிறந்த தமிழ், சமய ஆசிரியர் என்ற வகையில் சொக்கன் அவர்கள் மாணவர்களுக்கான பல்துறை நூல்களை எழுதி வெளியிட்டார். பாடநூல்களை மட்டுமன்றிப் பல கட்டுரை நூல்களையும் தொடர்ந்து வெளியிட்டுவந்துள்ளார்கள். அவர்கள் எழுதிய இருதுறை நூல்களும் ஐம்பதும் ஐம்பதுமாக நூறு நூல்களாக உள்ளன. தமது ஆக்க மதிப்பீடுகள் பற்றி அவர்கள் பின்வருமாறு விருப்புத் தெரிவித்துள்ளார்கள்.

''நான் எழுதிக் குவித்தவற்றில் எத்தனை பன்றிக் குட்டிகள் எத்தனை கன்றுக்குட்டிகள் என்பது எதிர்கால விமர்சகர்களின் கடமை; உரிமை''

இது அவர்களின் உயர் பண்புக்குச் சான்றாகும்.

# வலி.தென்மேற்கில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேத விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு,நவ.29

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் பயிர் அழிவுகள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகம் இந்த விவரங்களைத் திரட்டி வருகிறது.

வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகள் பாதிப்புகள் பற்றிய விவரங்கள் கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் -

பொதுமக்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு விவரங்களைத் தெரிவிக்க முடியும் என்றும் -

பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமையன்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்திலும் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் இது பற்றி தெரிவித்து, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பயிரழிவு ஏற்பட்டுள்ள விவசாயிகள் தத்தமது பிரிவு விவசாயிகள் சம்மேளனங்களுக்கூடாகத் தத்தமது கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளைக்கு 'பேரட்டோஸ்ரட்' இயந்திரம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைக்கு 'போட்டோஸ்ரட்' இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை யாழ். கிளையின் தலைவர் வீ.கே.கணேசலிங்கத்திடமிருந்து பருத்தித்துறைக் கிளையின் தலைவர் சூ.தவராசா பெற்றுக்கொண்டார். (எ-78)



வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுவர், முதியோர் தினவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் தி.வேல்நம்பி மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: கைதடிச் செய்தியாளர்)


# வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

கிராமத் தெரிவின்போது பின்வரும் வகுதியான கிராமங்களை / பிரதேசங்களைத் தவிர்த்தே திட்டத் தெரிவு இடம் பெறும். தவிர்க்கப்படும் வகுதியான கிராமங்கள் / பிரதேசங்கள் வருமாறு:

01. யுத்தத்தினால் வீடுகள் பாதிப்படையாத கிராமங்கள்.
02. வேறு ஏதாவது புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ், முழுமையாக வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராமங்கள்.
03. வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே வீடுகள் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராமங்கள்.
04. சுனாமி புனர்நிர்மாண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள் / பிரதேசங்கள்.
05. கடல் பாதுகாப்பு வலயத்துக்குட்படும் கிராமங்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட வரையறைக்குட்படாத கிராமங்களைப் புள்ளியிடல் அடிப்படையில் கணனி முறைப்படுத்தி தெரிவு இடம் பெறுகின்றது.

எனவே, உங்கள் கிராமமும் இத்திட்டத்திற்குத் தெரிவாகியுள்ளதா என்பதை அறிய:-

தொடர்ந்தும் நாளைய பத்திரிகையை வாசியுங்கள்.

(சி/46378) (24-19)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான திருமதி ஜெயந்தி சாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கலைமகள் மகாலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வண்ணை நாவலர் ம.வி.
யாழ்ப்பாணம். (43287)(42-11-17)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கலைமகள் மகாலிங்கம்

(சித்திரை பூபதி)



சரவணை கிழக்கு, பள்ளம்புலம், வேலணையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைமகள் மகாலிங்கம் அவர்கள் 25.11.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மகாலிங்கத்தின் (முன்னாள் சரவணை பள்ளம்புலம் கூட்டுறவு முகாமையாளர்) அன்பு மனைவியும் தம்பையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், நாகலிங்கம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கண்ணுதல் (கனடா), மயூரன் (கனடா), ஜெயந்தி (ஆசிரியர், யா/நாவலர் மகாவித்தி. யாழ்ப்பாணம்), வசந்தி (பிரான்ஸ்), சுதந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சங்கரலிங்கம் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை) அவர்களின் அன்புச் சகோதரியும், மகாதேவியின் மச்சாளும் காலஞ்சென்ற நடராசா (இளைப்பாறிய ஆசிரியர், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), அன்னலட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமி, சௌபாக்கியலட்சுமி, சாரதாம்பிகை (B.A., (Cey.) Dip.in Ed., இளைப்பாறிய ஆசிரியர், வேலணை துரைசுவாமி ம.ம வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகந்தி (கனடா), வாசுகி (கனடா), கலாநிதி சாந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்), ஞானசொரூபன் (சேகர் - பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (ஜெகன் - பிரான்ஸ்) ஆகியோரின் மதிப்பிற்குரிய மாமியாரும் அனித்தா, சயன், சயித்தா, மதுறமி, நிறோஷா, சானுஜா, கஜானன், கனீஷா, வனேஷா, இராகுலன், மதுஷா, யதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சுண்டுக்குளி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சரவணை புன்னன்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.18, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.இல. 077 9151160* (43285)(21-11-17-42)

*தகவல்*
*நா.மகாலிங்கம் (கணவர்),*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

## மாவீரர் பெற்றோரை கூ.சங்கம் கௌரவிப்பு

வலி.தென்மேற்கு.நவ.29

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது சங்கப் பிரிவிலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி ஒன்றை கடந்த சனிக்கிழமை நடத்தியது.

சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை, பெரியவிளான், வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களுக்கு சிற்றுண்டிகளும் அன்பளிப்பும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.

(ஜ-135)

## புனரமைக்கப்பட்ட நூலகம் கையளிப்பு

யாழ்.நவ.29

'நிகொட்' திட்ட நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பொம்மைவெளி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட நூலகம் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் நூலக ஆவணத்தை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். (எ-204)

## கணனிகள் அன்பளிப்பு

யாழ்.நவ.29

நவாலி மகாவித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஒரு தொகுதி கணனிகள் மற்றும் இசைக் கருவிகளை வழங்கியுள்ளது. வித்தியாலய அதிபர் பி.ஸ்ரீவிக்கினேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

(எ-185)


## VACANCIES

### UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

(For Para Medical Degree Programme)

Senior Lecturer Grade I / Senior Lecturer GradeII/Lecturer (Probationary) in Nursing/Pharmacy/Medical Laboratory Technology.
Demonstrator on contract in nursing / Pharmacy

**FACULTY OF ARTS**

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Geographical Information System.*
* Special Degree in Planning or relevant Social Science subjects with Geographical information System.

**FACULTY OF AGRICULTURE**

Instructor in computer Technology (on contract)

| Post | Salary scale w.e.f.01.01.2006 |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs.32,650-8x525-36850/=p.m. |
| Senior Lecturer Gr.II | Rs.28225-4x735; 1x620-31785/=p.m. |
| Lecturer (Probationary) | Rs.18300-1x525; 2x585; 21000/=p.m |
| Demonstrator (on contract) | Rs.14350/= (fixed) p.m. |
| Instructor in Computer Technology (on contract) | Rs. 16870/= (fixed) p.m. |

Note: In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

**Statutory benefits:**

1. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
2. Membership in University Provident fund and Pension Scheme in the University system.
3. Gratuity payments
4. Employees Trusrt Fund beneffts.
5. Free Medical Services.

**Closing date: 02.01.2006.**

Application forms and other details may be obtained from the office of the senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the ***Bursar University of Jaffna*** together with a self addressed stamped envelop 23x10 c.m. in size.

Those who wish to apply for ***more than one*** post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments / Corporations and statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA.
25.11.2005.
(C/46423)(42)



# S.LINGAM TIMBERS
## SALES CENTRE

சகல விதமான அளவுகளிலும் வேம்பு, முதிரை,மவுக்கினி, கிராண்டிஸ், சப்பு, மா, நீப்பை மற்றும் கிளோடி சிமெந்து, கெங்கிறீற் கற்கள் என்பன தரமானதும் மலிவான விலையிலும் விற்பனைக்குண்டு. நாடுங்கள்:-

அம்மன் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
*திருநெல்வேலி.* T.P.- **0773-151568.**




(43273)(42.11.17)


## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில் 13 - 09 - 1930*



*கந்தன் காலடியில் 29 - 11 - 2003*

### அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு

*(பொலிகண்டி கந்தவனம் கோயில் 6ஆம் திருவிழா உபயகாரர்)*

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

*தி.அன்னமுத்து* (மனைவி),
*லோகநாதன்* (மகன் - கனடா),
*தங்கராணி* (மருமகள்)
*பிரசாந், அனுசாந், அனுசாந்தி.*
(பேரன்மார்).

*லக்ஸி கொமினிகேசன்,*
*அச்சுவேலி.* (43268)(42-11-17)

# தாம் பின்னிய.....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கடந்த வருடத்தில் தலைவர் கூறியவை

கடந்த மாவீரர் நாளில் தலைவர் ஒரு விடயத்தைச் சொன்னார்.

இடைக்காலத் தீர்வும் இன்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, ஒரு வெறுமைக்குள், ஒரு சூனியத்துக்குள் எங்கள் மக்களை வைத்துள்ளோம். இந்த வெறுமைக்குள் இனியும் தொடர முடியாது.இனி மேற்கொண்டு பேச்சுக்கள் என்று இழுத்தடித்தால் எங்கள் சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் என்று கூறினார்.

இப்படிச் சொல்லிவிட்டு எங்களது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான போர்த் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்.அவர் இப்படிக் கூறி அடுத்த மாதம் - டிசெம்பர் மாதம் - ஆழிப்பேரலை அடித்தது. தாயகத்தின் கிழக்குக் கரையோரக் கிராமங்களை எல்லாம் அந்த ஆழிப் பேரலை அள்ளிப்போனது.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒட்டுமொத்தமாக 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 3 லட்சம் பேர் வீடுகளை, நிலங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

### ஊழிக் கூத்தும் பொதுக் கட்டமைப்பும்

இப்படியான பேரவலம் இயற்கையின் ஊழிக் கூத்து. மாபெரும் மனிதாபிமான அவலத்தை எதிர்கொண்டபோது எப்படி ஐயா சண்டை போடுவது?

எங்கள் தலைவர் முழுப்படையணிகளையும் களத்தில் இறக்கினார். 3, 4 மாத மாக அனைத்துப் படையணிகளும் அற் புதமான நிவாரணப் பணிகளைச் செய்தன. இயற்கையின் அனர்த்தத்தால் எமது போராட்டத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இந்தப் பேரழிவு உலக மனச்சாட்சியை உலுக்கியது என்கிறார் தலைவர்.

பெருந்தொகை உதவி செய்ய உலகம் முன்வந்தது. 4 பில்லியன் டொலர் என்ற நியாயமான உதவியை அளிக்க முன் வந்தனர்.

சந்திரிகா அம்மையார் நினைத்தார். நல்ல தருணம், நழுவ விடாதே என்று சொல்வது போல் புலிகளுடன் பேசியாவது காசை எடுக்கலாம் என்று திட்டமிட்டார். இரண்டு பேருமாக பேசி, பொதுக்கட்டமைப்பை உருவாக்கி, வெளிநாட்டுக் காசை மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்போம் என்றார். எங்கள் மக்கள்தான் அதிகம் இறந்தனர். சரி வெளிநாட்டு அரசாங்கங்கள் இவ்வளவு பெரிய காசைத் தரும்போது அதை வாங்கித்தர வேண்டியது எங்களது கடமை. ஏனெனில், விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எங்களுடைய மக்களின் நலனைத்தான் நாம் பார்க்கவேண்டும்.

அல்லல்படுகிற மக்களை விட்டுவிட்டு போராட்டத்திற்கு இறங்கினால் அது சாத்தியமில்லை. ஆகவே, சந்திரிகாவுடன் பேசினோம். இந்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மாதக் கணக்கில் இதுவும் இழுபட்டது. சமாதான செயலகங்கள் மட்டத்தில்தான் இந்தப் பேச்சுகள் கொழும்பில் நடந்தன. இதில் சில விடயங்களை விட்டுக்கொடுத்துப் பொதுக் கட்டமைப்புக்கு இணங்கினோம். நீண்ட காலத்துக்குப் பிறகு விடுதலைப் புலிகள் இயக்கமும் ஸ்ரீலங்கா அரசும் ஒரு கட்டமைப்புக்கு இணங்கினார்கள். பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்திட்டதிற்குப் பின்னர் சந்திரிகா அம்மாவின் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்ட மொட்டைகள் - புத்த பிக்குகள் மற்றும் ஜே.வி.பித்தரப்பினர் எதிர்த்து அரசாங்கத்திலிருந்து விலகி உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டனர்.

உயர்நீதிமன்றமும் அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பை அளித்தது. நிவாரணப் பணத்தை பகிர்ந்தளிக்கிற இந்தப் பொதுக் கட்டமைப்பு செயலிழந்து செத்துப்போகுது.

இதைச் சுட்டிக்காட்டுகின்ற தலைவர், தமிழர்களுக்கு சமஷ்டியும் கொடுக்கத் தேவையில்லை, சுயாட்சியும் கொடுக்கத் தேவையில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வெளிநாடுகள் அளிக்கின்ற காசைப் பகிர்ந்து கொடுக்கிற ஓர் அதிகார அமைப்பையே தர முடியாத நீ எங்கள் மக்கள் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறாய் என்று அடித்துக் கேட்கிறார் தலைவர்.

சிங்கள ஆட்சிப் பீடம் - பேரினவாதம் - ஆளும் வர்க்கம் - எங்களுடைய மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை. அப்படியானால் நாங்களாகத்தான் போராடி வெல்ல வேண்டும். சிங்களவனின் காருண் யத்தில் 57வருடம் இருந்தது போதும். இதற்கு உதாரணமாகத்தான் சொல்கிறார் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த கதி என்ன என்பதை.

### நிழல் யுத்தம்

இது ஒருபுறம் இருக்க, இந்த ஆண்டு மற்றொரு விடயம் நடந்தது என்கிறார் தலைவர். விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஒரு நிழல் யுத்தம். மறைமுக யுத்தம்.

யாரோ மறைந்து நின்று கண்ணிவெடி வைத்து கொல்லுவான். யாரென்று பார்த்தால் தெரியாது.

இந்த நிழல் யுத்தம் தொடங்கியது. இந்த ஆண்டு மிகத் தீவிரமாக நடந்தது. எங்களின் மூத்த உறுப்பினர்கள். முக்கிய போராளிகள். ஆதரவாளர்கள், கல்விமான்கள், முக்கிய ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலரையும் படுகொலை செய்து வந்தார்கள். இந்தப் பின்னணி பகிரங்கப் படுத்தப்படவில்லை. சூத்திரதாரி யாரென்று பார்த்தால் இராணுவப் புலனாய்வுத்துறை.

அவற்றுக்குப் பின்னால் சிங்கள இனவாத அரசியல் தலைவர்கள். எமது தலைவர் சொல்கிறார், இந்த அரூப கரங்கள்தான் இதை நடத்தின.

இது சமாதான யுகம். 4 வருடமாகப் போர் நிறுத்தம். நாம் அமைதி பேணுகிறோம். அவன் போட்டுத் தள்ளுகிறான் நம்மை. இதுதான் சிங்கள ஆளும் வர்க்கத்தினது - இனவாதத்தினது - நயவஞ்சகமான செயல்.

அப்படியானால் 4 வருடமாக எவ்வளவு பொறுமையோடு எங்கள் தலைவர் - தலைமைப்பீடம் - இருந்திருக்கும்?

### விமர்சனம் மட்டும் புலிகளுக்கு எதிராக

இவ்வளவும் செய்து விட்டு எங்கள் மீது தான் விமர்சனம் வருகிறது. வெளிநாடுகளிலிருந்து - எங்களுக்கு - புலிகளுக்குச் சொல்கிறார்கள் - கொலைகளை நிறுத்துங்கள் என்கிறார்கள்.

அவன் கொல்வது யாரை? எங்களை அழிக்கிறான் அவன். ஆனால், உலகம் எங்களை விமர்சிக்கிறது. தலைவர் என்ன சொல்கிறார்? சிங்களவர்களுக்கு இராணுவத் தீர்வில்தான் நம்பிக்கை உண்டு. சமாதானத்திலோ, பேச்சுகளிலோ, தமிழர்களுடன் பேசி நீதி வழங்குவதிலோ விருப்பம் இல்லை.

சமாதானம் என்ற மாயைக்குள் வைத்துக்கொண்டு எங்களுக்கு எதிராக நிழல் யுத்தத்தை - ஒரு நாசகார யுத்தத்தை - நடத்தி, அழித்து, இயக்கத்தை உடைக்கின்றதுதான் அவர்களது நோக்கம்.

இதற்கு சிங்கள இராணுவம் நேரடியாக வரவில்லை. இதற்கு தமிழ் ஆயுதக் குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் கூலிப்பட்டாளம் இருக்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு எதிராக தமிழர்கள் செய்யும் கூத்துகள் இவை. இவற்றால்தான் அன்றும், இன்றும் பிரச்சினை.

சமாதானம், போர் நிறுத்தம், பேச்சு - இந்த மூன்று சொற்பதங்களிலும் எதுவித அர்த்தமும் இல்லை என்கிறார் தலைவர்.

சமாதானம் என்று சொல்லிக்கொண்டு யுத்தம் செய்கிறீர்கள்.முகத்தை மறைத்து இருண்ட யுத்தம். நிழல் யுத்தம். அப்படியானால் என்ன சமா தானம்?

போர் நிறுத்தம் என்றால் போர் நிறுத்த விதிகளை நீ செயற்படுத்தவில்லை.

இலட்சம் இலட்சமான மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களில் உள்ளனர். இன்னமும் எங்கள் நிலத்தை ஆக்கிரமித்து நிற்கிறாய். 10 வருடத்திற்கும் மேலாக நிற்பதா? கல்வீடுகளுடன் இருந்த இலட்சக்கணக்கான மக்கள் கொட்டில்களில் கிடந்து சாகிறார்கள். இது தானா போர் நிறுத்தம்?

போர் நிறுத்த விதிகளின்படி ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை எப்போதே பறித்திருக்கவேண்டும். ஆயுதங்களையும் பறிக்காமல், ஏவிவிட்டு எங்களைக் கொல்லச் சொல்கிறாய். இதுதான் போர் நிறுத்தமாம், பேச்சாம்.

பேச்சு என்றால் இழுத்தடிக்கின்ற நோக்கம். அதில் ஒரு சதிவலைப் பின்னல் உள்ளது. உலக நாடுகளைப் பிடித்து எங்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து வெளியேற்றவேண்டும் என்பதுதான் பேச்சாம். ரணில் ஐயா செய்த விளையாட்டு இதுதான்.

எங்களில் பலபேருக்கு கோபம். ரணில் ஐயாவுக்குப் போட்டிருந்தால் நீங்கள் பேசப் போயிருக்கலாம் என்று சொல்கிறவர்களும் உண்டு. அவன் ஐயா ரணில் பயங்கர நரி. ராஜபக்ஷ பரவாயில்லை. அது ஒரு பயங்கர நரி.

ஏனென்றால், பேச்சுகளில் இழுபட்டு, களைத்துப் போன மனிதனாக நான் சொல்லுகிறேன். இவர்களை பிரேமதாஸ காலத்திலிருந்தே எனக்குத் தெரியும்.

17 வயதில் பத்திரிகையாளனாகி இந்த அரசியல்வாதிகளோடு பழகியவன். அவர்களது சூத்திரங்கள், ஜில்மால்கள் எல்லாம் எனக்குத் தெரியும்.

சிலபேர் 'ரணில் பரவாயில்லை. என்னமோ பெடரல் தருவதாகச் சொல்கிறான்' என்கிறார்கள்.

57 வருடமாகப் 'பெடரலிசம்' பற்றி கதைத்திருக்கிறோம். அது என்ன புதுவிடயமா ஐயா?

செல்வநாயகம் காலத்திலிருந்து 'பெடரல்' பற்றித்தான் இடறல் பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

அவர்கள் 'பெடரலும்' தரமாட்டார்கள் 'பெடரல்' என்ற மாயையைக் காட்டி ஏமாற்றுகிற வித்தை இது.

### சிங்களவருக்கு ... புரியும் மொழி ஒன்றே ... ள்ளது

இந்தப் பொதுக்கட்ட... ப்பையே - ஒரு கிராம சபைக்கு இருக்க... அதிகாரம் கூட இல்லாத பொதுக் ... ப்பையே - தராத சிங்களவன், தமிழர் தாயகத்தை ஏற்று, தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்று, உங்களைக் கொண்டுபோய் சிம்மாசனத்திலே உட்கார வைத்து இந்தா சுயாட்சி என்றா தரப்போகிறான்?

சிங்களவனுக்குத் தெரிந்த மொழி இ... கிறது. அது 'அடி'. அடித்தால்தான் அது விளங்கும். இது புலிகளு... த் தெரியும். (அடங்காத மக்கள் கைதட்டல்)

கடந்த 57 ஆண்டுகால அ... ல் ... ரலாறு - புலிகள் நடத்திய 30 ஆ... ப் போராட்டம்- கடந்த பல வருடங்க... ங்கள் நடத்திய பேச்சுகள் - இவற்றை சீர்தூக்கிப் பார்த்து முடிவுக்கு வந்தால்....

இனியும் போய் சிங்களவரிடம் கையேந்தி எனக்குக் கொஞ்சம் சலுகை தா, சமஷ்டி தா என்று கேட்பதில் பிரயோசனம் இல்லை.

அதாவது, சிங்கள அரசியலில் இருந்த நம்பிக்கை, சிங்கள அரசியல்வாதிகளுடன் பேசி அவர்களது காருண்யத்திலிருந்து ஏதாவது உரிமைகளைப் பெறலாம் என்ற அந்த நம்பிக்கை உடைந்து போய்விட்டது.

எங்களுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் கூட.

### சர்வதேசத்துக்கு தமிழரின் அறை கூவல்

சமீபகாலமாக தமிழீழம் எங்கும் பெரிய எழுச்சியைப் பார்த்திருப்பீர்கள். மக்கள் வெளியே வந்தார்கள். பொங்கு தமிழ் விழா, தமிழ்த் தேசிய எழுச்சி விழா.

சமுத்திரமாக வந்து மக்கள் குரல் எழுப்புகிறார்கள். அந்தக் குரல் சிங்களவனுக்கு இல்லை - சர்வதேச சமூகத்துக்குரியது.

சர்வதேச சமூகத்துக்கு அறைகூவல் விடுக்கிறார்கள்.

எங்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்.

எங்களுடைய தாயகத்தை ஏற்றுக்கொள்.

எங்களுக்குத் தன்னாட்சி உரிமை வேண்டும்.

எங்கள் மக்கள் எங்கள் மண்ணிலிருந்து உலகத்துக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரிய பெரிய நிகழ்வுகள் நடந்தன.

கடைசியாகத் தேர்தல் வந்தது. யாருடைய தேர்தல்?

சிங்கள ஜனாதிபதியை நியமிக்கிற தேர்தல். ஏன் நாங்கள் இதில் பங்களிப்புச் செய்யவேண்டும்?

ரணில் வந்தால்... ராஜபக்ஷ வந்தால்..... பிரச்சினை தீருமா? தீராது.

இதில் எவனுக்கு வாக்கைப் போட்டு, ஆட்சிப் பீடத்திலே ஏற்றி, மீண்டும் பழையபடி தாய்லாந்து போய் சுற்றிப் பார்க்கச் சொல்கின்றீர்கள்?

அதனால் எமது இயக்கம், கூட்டணி எம்.பிமாரைக் கூட்டிக் கதைத்துச் சொன்னது. நாங்கள் இதில் தலையை ஓட்டக்கூடாது. இதை நம்பாதீர்கள். இதில் அக்கறை காட்டாதீர்கள் என்று சொன்னது இயக்கம்.

மக்களுக்குப் புலிகளின் செய்தி விளங்கியது. மக்கள் தேர்தலில் வாக்களிக்க விரும்பவில்லை. அதுதான் நடந்தது.

ஆனாலும் ஈ.பி.டி.பி. போன்றவை கள்ள வோட்டுப் போட ஒழுங்கு செய்தார்கள்.

அங்கிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் சும்மா விடவில்லை இதை. இரவு இரவாகப் போய் பட்டாசு கொளுத்தி விரட்டி விட்டிருக்கிறார்கள்.

அதை வைத்துக்கொண்டு உலகம் முழுக்க எங்கள் மீது விமர்சனம்.

'நீங்கள் தேர்தலை புறக்கணிக்கச் சொன்னது மக்களின் ஜனநாயக உரிமையை மீறுவது. ஆகவே, ஐரோப்பிய ஒன்றியத்தில் உங்களுக்குத் தடை வரப்போகிறது' என்று மிரட்டல் விடுகிறார்கள்.

அப்படியானால் சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் ஒன்று கேட்கிறோம்.

கடந்த 10 வருடங்களாக, சொந்த வீடுகள், சொந்தக் காணிகள், சொந்தக் கிராமங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, அநாதைகளாக - அகதிகளாக - ஏதிலிகளாக - இந்த அகதி முகாம்களிலும், நலன்புரி மையங்களிலும், இலட்சக்கணக்கான மக்கள் கிடக்கிறார்களே....

அவர்களது ஜனநாயக உரிமை பற்றி சர்வதேச சமூகமே கதைத்தீர்களா? அது ஜனநாயக உரிமை மீறல் இல்லையா?

### தமிழர் வெளிப்படுத்திய செய்திதான் என்ன?

நாங்கள் ரணிலுக்கு வாக்களித்திருக்க வேண்டுமாம். வாக்களித்திருந்தால் அவர் வந்திருப்பார். சதிவலை போடலாம் என்று அவர் காத்திருப்பார்.

தேர்தல் புறக்கணிப்பு முக்கியமான விடயம். இதுவரை காலம் இல்லாத முக்கிய விடயம் இது.

இதுவே முதல் முறையாக எங்கள் தமிழ் மக்கள், சிங்கள ஆட்சிப் பீடத்தைப் புறக்...து நீங்கள் யார் ஆண்டாலும் எங்களு...ச் சம்மதமில்லை என்று சொல்லி...ரு...றார்கள்.

...ங்கள தேசத்திலே இதனால் பெரிய ... மாற்றம். என்ன விளையாட்டு இது ... அங்கே கேள்வி எழுகிறது.

...க்கள் தேர்தலைப் புறக்கணித்திருக்... ஒரு தனிநபருக்காக, தனிநபர் ...மை...காக, ஒரு கட்சிக் கொள்கைகளுக்க... எங்கள் மக்கள் அதைப் புறக்கணிக்...லை. ரணிலையோ, ராஜபக்ஷவையோ ...ங்கள் புறக்கணிக்கவில்லை.

...கள் புறக்கணித்தது சிங்கள அரசியல் அமைப்பை. சிங்கள ஆட்சிப்பீடத்தை.

வேண்டாமய்யா... நாங்கள் இனி தனி வழியே போகப் போறோம். நீங்கள் உங்கள் ஆட்சி அதிகாரத்தை வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் எங்களது அரசியல் தலைவிதியை, அரசியல் தகைமையை, நாங்களாகத் தீர்மானிக்கின்ற காலம் வந்துவிட்டது என்ற செய்தி அங்கே சொல்லப்பட்டது. (மக்கள் அடங்காத கைதட்டல்.)

மக்கள் கொடுத்த செய்தி வேறு, ஆனால், உலகம் எங்களைத்தான் விமர்சனம் செய்கிறது. உலகத்துக்கு மக்களின் விடயம் புரியவில்லை.

எனக்கு மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தொலைபேசியில் அழைத்துச் சொன்னார். சந்திக்கவேண்டும் என்றார். அவர்கள் கிளிநொச்சிக்குத்தான் போவதில்லை. என்னைத்தான் தேடுகிறார்கள்.

''மிஸ்டர் பாலசிங்கம், உங்கள் இயக்கம் மக்களைத் தடுத்து நிறுத்தி, பயமுறுத்தி, இந்தத் தேர்தலைத் திசை திருப்பியதால் சிங்களத் தீவிரவாதி ஒருவர் வந்திருக்கிறார். நிலைமை மாறப்போகிறது. சண்டை வரப்போகிறது. இதற்கு நீங்கள்தான் காரணம். ஆகவே, ஐரோப்பிய ஒன்றியம் உங்களைக் கண்டிக்கத் தீர்மானித்துக்கொண்டிருக்கிறது. என்ன செய்ய உங்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும்.'' - என்று அவர் சொன்னார்.

அதற்கு நான் சொன்னேன்.–

நீங்கள் எங்களைத் தண்டிக்கலாம். பிரிட்டனில் தடை இல்லையா என்றேன்.

இவ்வளவு மக்கள் இன்றைய கூட்டத்துக்கு வரவில்லையா? (மக்கள் கைதட்டல்) நீதிமன்றம் வரைக்கும் கோவணம் கட்டிப் போய் நின்றார்களே, ஒன்றும் எடுபடவில்லை.

ஏனெனில், மக்களையும், புலிகளையும் எவராலும் பிரிக்கமுடியாது ஐயா.(அடங்காத மக்கள் கைதட்டல்)

இங்கிலாந்தில் எனக்கும் தடை. நான் தனியே வெளியே போனபோது ஒருவர் கேட்டார் ''என்ன பாலா அண்ணை தனியா திரிகிறியள்?''- என்றார்.

நான் சொன்னேன்... ''வீட்டில் கிடந்து குளிரில் 'ஹார்ட் அட்டாக்' வந்து செத்தால் எனக்கு மதிப்பில்லாமல் போய்விடும். இப்படித் தனியாகத் திரியும் போது யாராலும் போட்டுத் தள்ளினால் மாவீரராக மாறிவிடலாம்'' என்றேன்.

ஐரோப்பாவில் தடை வரலாம். சரி வரட்டும். ஐரோப்பாவில் உள்ள தமிழ் மக்கள் சரியான தேசப்பற்றுள்ள மக்கள், விடுதலைப் புலிகளை உறுதியாக நம்புகின்ற மக்கள். அங்கு தடை வந்தலும் எங்கள் மக்கள் எங்களை கைவிடப்போவதில்லை.

நாங்கள் பகிரங்கமாகச் செய்கிற விடயங்களை வேறுவகையில் செய்வோம். நான் பிரிட்டிஷ் பாஸ்போட் வைத்திருப்பதால் எப்படியும் போய்விடுவேன். உண்மையில் பிரச்சினை என்னவெனில் அங்குள்ள தமிழ்ச்செல்வன், புலித்தேவன் ஆட்கள்தான் இங்கு வர இயலாது.

### சிங்களவரின் தெரிவு

அடுத்து தலைவர் இன்னொரு முக்கிய விடயத்தைச் சொல்கிறார்.

அந்த ஒரு தேசியத் தலைவனை சிங்கள மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ என்கிற அவர் சுத்தமான சிங்கள பௌத்தர். இவரைத் தெரிவு செய்ததுமே சிங்கள பௌத்தர்களின் வாக்குகள்தான்.

சிங்கள பௌத்த மக்களின் பெரும்பான்மை வாக்கோடுதான் மஹிந்த வந்திருக்கிறார்.

ரணிலுக்கு விழுந்தது எல்லாம் மலையக, முஸ்லிம் வாக்குகள்தான். நாம் வாக்களித்திருந்தால் ரணில் வென்றிருப்பார்.

ஆனால், ஒரு சிங்கள பௌத்தர் வந்துள்ளார். அவரோடு 27-கட்சிகள் மட்டுமில்லாமல் மஞ்சள் காவி உடுத்திய மொட்டைகள், சிவப்புச் சட்டைகள் எல்லாம் சேர்ந்துள்ளன.

அங்கே ஒரு பெரிய சிங்கள பௌத்த மேலாண்மைவாதம் ஆட்சிப்பீடம் ஏறியுள்ளது.

சரி... தமிழீழத்தில் என்ன நடக்கிறது?

தமிழீழத்திலும் தமிழ்த் தேசியவாதம் வீறுகொண்டு எழுந்துள்ளது. தலைவர் சொல்கிறார். 'இங்கே ஆட்சி பீடம் ஒன்று இருக்கிறது. இங்கே புலிகளின் ஆட்சிப்பீடம்

(13ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் K.K.S. வீதி, பெரியபுலம் பாடசாலைக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776035055. (43188)

113, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியில் கிணற்றுடன் கூடிய 5 பரப்பு 13½ குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 551431. (சி/46419)

சாவகச்சேரி, சங்கத்தானை, பொற்தொழி லாளர் வீதியில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (இத்திடியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) தொடர்புகளுக்கு: க.அமுது, சரதா வீதி, சங்கத்தானை. T.P.No.: 077 6171545. (43299)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி தெற்கில் கந்தசாமி கோயிலுக்கு மிகவும் அண்மையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6424797 (43290)

## தவறிவிட்டது

மனோகரன் ஆதவன் என்பவருடைய தே.அ.அட்டை (821434610V) 26.11.2005 அன்று கொட்டடிக்கும் கொக்குவிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாற்பண்ணை வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (43286)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 28.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும், உடுவில் பாம் சென்ரர், உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43168)

நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 30.11.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ்-ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - 1ஆம் கட்டை, பருத்தித்துறை, ரஞ்சித்- 517, ஸ்ரான்லி றோட், P.ரவி-சாவகச்சேரி, மதுரா-கால்நடைத் தீவன விற்பனை நிலையம்-ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2222867, 2223529 (43042)

## தேவை

கோழிகள் பராமரிப்பதற்கு உதவியாளர் உடன் தேவை. (வேலை இலகுவானது) தொடர்பு: T.P.: 077 3086972 (சி/46434)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (CRUMBED RUBBER) தயாரிக்கப்பட்ட சிறிய பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.சிறிபதி, நவரட்ணராஜா, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI, ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). (சி/46278)

## தேவை

எமது விற்பனை நிறுவனத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

**மக்மிலன் புத்தகசாலை**
No.3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(C/46433)(42.32.19.17)

## Refnesh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.
(43247)(42.32.19.11)

## CHEMISTRY
**by: Vakeesan**

**2006 A/L**
Physical + Organic Paper — Mon, Fri 4.30 - 6.30p.m. / Wed 4.30 - 6.30 p.m.
Start: 02.12.2005
Organic — Sat, Sun 1.30 - 3.30 p.m.
Start: 03.12.2005
**2007 A/L**
Thermo: Tue.Wed.Thu.6.30 - 7.45 a.m.
Start: 01.12.2005
Note: புதிய நேரப்படி

பல்கலைக்கழகம் முன்பாக
திருநெல்வேலி. (43236)(21.32.19.11)

# தேவை

திருக்கேதீச்சரத்தில் சிவன் அருள் இல்லத்தால் நடத்தப்படும் சிறுவர் பாதுகாப்பு பராமரிப்பு நிறுவனத்திற்கு நற்பண்பும் அன்பும் ஒழுக்கமும் ஆளுமையும் ஒருங்கே பொருந்திய ஓய்வுபெற்ற ஆசிரியை அல்லது அனுபவமிக்க கற்றறிந்த பெண் ஒருவர் சிறுவர்களைப் பராமரிக்க உடன் தேவை. தங்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விரும்புபவர் நேரிலோ அல்லது விண்ணப்ப மூலமோ தொடர்பு கொள்ளவும்.

முகவரி: செயலாளர்
"சிவன் அருள் இல்லம்"
480/165, றொக்சித் தோட்டம்,
கொழும்பு - 06.

(சி/46435)(26-32-11-19)

தொலைத்தொடர்பு : 011-2586042, 023 -2233003

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## மின்பிறப்பாக்கி திருத்துவதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 27 கே.வி.ஏ. மூன்று அவத்தை டீசல் மின்பிறப்பாக்கி திருத்துவதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் 30.11.2005 அன்று அல்லது 01.12.2005 அன்று முற்பகல் 10 - 11 மணிக்கிடையில் மின்பிறப்பாக்கியை பார்வையிடுவதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் அத்தியட்சகர் அவர்களைச் சந்தித்து மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கூறுதாரர்கள் தாமாகவே தயாரித்த கூறுவிலைப் படிவங்களை 09.12.2005 அன்று பிற்பகல் 2 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு வேலைகள் எந்திரியலாளர், பராமரிப்புப் பகுதி, யாழ்.பல்கலைக்கழகம், த.பெ.இல.57, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது யாழ்.பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கூறுவிலைத் தலைப்பு தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

த.பெ.இல.57,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி/46403)(32-11-19)

# 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 09 - 11 - 1932
மறைவு 30 - 10 - 2005



அமரர்
## ஐயாத்துரை தெட்சணாமூர்த்தி

மாதங்கள் ஒன்று சென்றாலும்
ஆறவில்லை நம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது!
உங்கள் ஆத்ம சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

த.மகேஸ்வரி,
விக்காவில்,
காரைநகர்.

மகன், மருமகள்,
மதியழகன், இந்திரா
(பிரான்ஸ்).

(43281)(32-11-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 - 02 - 1917
மறைவு 30 - 10 - 2005



## திருமதி ஞானாம்பிகை சிற்றம்பலம்

எமது அன்புத் தெய்வமான தாயாரின் திடீர் மறைவு கேட்டு உடன் வந்து உதவிகள் பல புரிந்து ஆறுதல் கூறியதுடன் அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்துகொண்டோருக்கும் தந்தி மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் மலர்வளையங்களைச் சாத்தியும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்ட நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: மகன் விஜயகுமார்,
D/3, அன்டெர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 5.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், குடும்பத்தினர்.

(சி/46418)(32-11-19)

# கள உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் கோரல்

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவில் கள உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புமுகமாக அனுபவம் மிக்கவர்கள் தேவைப்படுகின்றனர். கீழ் காணப்படும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* 25 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
* சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கவேண்டும்.
* சிறந்த தொடர்பாடல் திறன் இருத்தல் வேண்டும்.
* ஆங்கிலம் மற்றும் பிறமொழித் திறன் இருத்தல் வரவேற்கப்படும்.
* பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**விண்ணப்ப முடிவு திகதி: 02.12.2005**

விண்ணப்பதாரிகளின் சுயவிபரக்கோவை அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**இணைத்தலைவர்,**
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/46412)(32-19-11)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 19 - 07 - 1924
ஆறுமுகனின் பாதங்களில் 11 - 12 - 2001



## அமரர் ஆறுமுகம் குமாரவேலு
(பலகாடு, காரைநகர்)

எமது குடும்பத்தின் தலைவராக இருந்து எம்மை நல்வழிப்படுத்தி சிறந்த வாழ்க்கைப் பாதையைக் காட்டியவர் ஒளிவிளக்கு ஆறுமுகம் குமாரவேலு. சிவபதமடைந்த 4ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரை நினைவு கூர்ந்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் பொசுட்டி முருகன் திருப்பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

44/6, பராக்கிரம மாவத்தை,
பசறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(43274)(32-19-11)

ஓம்சாய்ராம்

# நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17 - 09 - 1927
விண்ணில் 02 - 12 - 2002



## அமரர் இராசையா செல்லையா
(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)

திதி: 29.11.2005

எங்கள் அன்பான அப்பாவே
மூன்று ஆண்டுகள் ஓடி
மறைந்துவிட்ட போதும் என்றென்றும்
எம் நெஞ்சங்களில் பசுமையான
நினைவுகளுடன் வாழ்வீர்கள்...

இல.5, தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(43076)(32-11-19)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னரியம் தம்பிப்பிள்ளை

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், வவுனியா தற்பொழுது வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னரியம் தம்பிப்பிள்ளை 27.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - குழந்தையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தம்பிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர், மலேசியா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இரத்தினபாபதி மற்றும் நவரத்தினம், குலசிங்கம், துரைசிங்கம் ஆகியோரது அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-12-2005 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

31, Canal Lane,
Wellawatte,
T.P.: 0112-508824.

தகவல்:
த.நவரத்தினம்
(ராசு - மகன்)

(43294)(32-21-11-19)





கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட மேலும் சில படங்கள். (படங்கள் : நேசன்)

# தாம் பின்னிய.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. புலிகளின் நிர்வாகம் இருக்கிறது. புலிகளின் நிழல் அரசாங்கம் இருக்கிறது' - என்கிறார்.

அதுதான் தமிழ்த் தேசியத்தின் ஒரு வடிவம். ஆகவே, அவர் தன்னுடைய ஆட்சி அமைப்பின் பரிமாணங்களைப் பற்றிச் சொல்கிறார்.

எங்களிடம் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உண்டு. வரையறுக்கப்பட்ட எல்லைகள் உண்டு. எங்கள் ஆட்சியில் பெரிய மக்கள் தொகை உண்டு.இவற்றைப் பாதுகாக்கப் பலம் வாய்ந்த கடற்படை உள்ளிட்ட இராணுவம் இருக்கிறது. எங்கள் நிர்வாகத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணக் காவல்துறை உள்ளது. நீதி, நிர்வாகம் உள்ளிட்ட அரசுக்குரிய சகல கட்டுமானங்களும் எம்மிடம் உண்டு.

இப்படியான ஒரு பெரிய பிரமாண்டமான அமைப்பை நடத்துகிறோம். எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் 70 வீதமான மண்ணை மீட்டிருக்கிறோம். அதில் இந்த ஆட்சி நடக்கிறது.

சிங்களவனுக்கு இதைப்பார்க்க இயலாமை - நம்பமுடியாமை- உள்ளது. நம்பினாலும் ஏற்க முடியாது உள்ளது அவனுக்கு. அவனோ விடுதலைப்புலிகள் ஒரு சின்ன பயங்கரவாதக் குழு என்றுதான் உலகம் முழுவதும் பிரசாரம் செய்கிறான்.

இந்தப் பிரசாரத்தை நம்பி பல உலக நாடுகள் எங்களை இன்னமும் பயங்கரவாதப் பட்டியலில் வைத்திருக்கின்றன.

அந்த உலக நாடுகள் சொல்கின்றன... நீங்கள் வன்முறையைக் கைவிடுங்கள் என்றுதான் அவை கூறவேண்டும்.

அதைவிட்டு விட்டு ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு, ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவன் போடுகின்ற பிச்சையை எடுத்துக் கொண்டு போகச் சொல்வது நியாயமா?

அதற்குத் தலைவர் சொல்கிறார்.

சரி ஐயா, இவ்வளவு காலம் எவ்வளவோ முயற்சி செய்து உலகத்துக்கு ஒரு உண்மையைக் காட்டினோம். என்ன உண்மை? இவ்வளவு காலம் பேச்சுகளில் பங்கேற்று, நீ சொன்ன மாதிரி பொறுமையைக் கடைப்பிடித்து, எல்லைகளைக் கடந்து, சகிப்புத் தன்மையின் சிகரத்துக்குச் சென்று.... எல்லாம் செய்தும் ஒன்றும் இல்லையே....?

மேற்கொண்டும் அவன் ஏதும் தரப் போகின்றான் என்று எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

அப்படியானால் எங்களுக்கு என்ன வழி?

நாங்கள் எங்கள் தலைவிதியை நாங்களே தீர்மானிக்கப்போகிறோம்.

எங்களுக்கு என்று ஒரு ஆட்சிப் பீடம் உள்ளது.

எங்கள் மண்ணை நாம் மீட்டெடுத்துள்ளோம்.

இன்னும் 30 வீதம்தான் வெளியே இருக்கிறது. 70 வீதத்தை நாம் மீட்டுவிட்டோம்.

அந்த அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கிற மக்கள் கூட, எங்களைத்தான் - புலிகளைத்தான் - ஆதரிப்பார்கள். தேர்தலைப் புறக்கணித்தார்களே யாழ்ப்பாண மக்கள்...!

40 ஆயிரம் படையினரை வைத்துக் கொண்டு உங்களால் வாக்களிக்கச் சொல்ல முடிந்ததா? தேர்தலை நடத்த முடிந்ததா? முடியாது.

பிரபாகரன் வன்னியிலிருந்து கொண்டு பகிரங்கமாகக் கூடச் சொல்லவில்லை. மறைமுகமாகச் சொன்னார். தேர்தல் தேவையில்லை என்று.

### பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் என்ன?

அடுத்து பயங்கரவாதம்...

பயங்கரவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தி எங்களைத் தடுத்து வைத்திருக்கிறீர்கள்.

சரி... தலைவர் கேட்கிறார். அப்படியானால் பயங்கரவாதம் என்றால் எது? எங்களுக்குச் சொல்லுங்கள் என்கிறார்.

ஆனால் இல்லையே... ஐயா.. ஒவ்வொரு நாடும் பயங்கரவாதத்துக்கு விளக்கமாக ஒவ்வொன்றை வைத்திருக்கிறார்கள்.

இந்தியாக்காரனுக்குப் பயம். தெளிவான வரைவிலக்கணம் கொடுத்தால், அங்கே நீதியின் அடிப்படையில், தருமத்தின் அடிப்படையில் உரிமை கேட்டுப்போராடுகிற எத்தனையோ தேசிய இனங்களினது போராட்டத்தை இந்தியாக்காரர் அமுக்கி வைத்துள்ளனர்.

ரஷ்யாக்காரன் அமுக்கி வைத்திருக்கிறான்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில், பல்வேறு தேசிய இனங்களை நசுக்கிக் கொண்டு இருப்பவர்கள் எல்லோரும் ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபையில் போய் ஒரு தெளிவான ஒரு வரைவிலக்கணத்தைப் போடமுடியுமா? முடியாது. முடியவில்லை.

இவ்வளவு காலமாகப் பயங்கரவாதத்தின் பெயரில் எத்தனையோ இயக்கங்களைத் தடைசெய்துள்ளீர்கள்.

ஆனால், உங்களால் 'பயங்கரவாதம்' என்பதற்கு வரைவிலக்கணம் தரமுடியாது!

நீதிக்காக -நியாயத்துக்காக - தர்மத்துக்காகப் போராடும் விடுதலை இயக்கங்களை நீங்கள் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்.

இதை சாதகமாக வைத்துக்கொண்டு அரச பயங்கரவாதிகள் இருக்கிறார்கள். அதாவது, அரசுகள் செய்கிற பயங்கரவாதம் பற்றி ஒருவருக்கும் கவலை இல்லை.

அமெரிக்காவினது தலைமையிலே பயங் கரவாதத்துக்கு எதிரான ஓர் இயக்கம். இதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று இந்தியா, இலங்கை, ரஷ்யா எல்லாரும் சேர்ந்து தங்களது நாட்டில் தாங்கள் செய்கிற அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்கிறார்கள்.

ஆகவே, காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக - இனப்படுகொலைகளுக்கு ஆளான மக்களுக்காக - ஆயுதம் எடுத்துப் போராடி 18 ஆயிரம் போராளிகளைப் பலி கொடுத்து இன்னமும் உலகத்தையே எதிர்த்துத் தன்மானத்தோடு தலைவணங்காமல் நிற்கிறான் பிரபாகரன். (மக்கள் கை தட்டல்).

அப்படியான எங்களைப் பயங்கரவாதிகள் என்று நீங்கள் சொல்வது நியாயமா என்று தலைவர் கேட்கிறார்.

நாங்கள் அரச பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய போராளிகள்.

எங்கள் மீது ஏன் தேவையில்லாத இந்த முத்திரை குத்துகிறீர்கள்?

### மஹிந்தவின் கொள்கைகள்

மஹிந்த ராஜபக்ஷ - இவர் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகியவைகளுடன் என்ன மாதிரியான ஒப்பந்தங்களைச் செய்தவர்? அவற்றுக்கு மஹிந்தவின் சிந்தனைகள் என்கிறார்கள்.

- தலைவர் சொல்கிறார்... மஹிந்தவுக்கும் எங்களுக்கும் - அவரது சிந்தனைகளுக்கும் எங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கும் - இடைவெளி மிகப் பெரியது என்கிறார்.

இனி மஹிந்தவின் கொள்கைகளைப் பார்ப்போம்.

அவர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் என்ன கூறியிருக்கிறார்?

ஒற்றையாட்சிக்குக்கீழ்தான் தீர்வு. ஒற்றையாட்சியை விடமாட்டோம் என்கிறார்.

நாங்கள் சொல்கிறோம். சரி. நீ ஒற்றையாட்சியை வைத்துக்கொள். நாங்களும் ஓர் ஒற்யையாட்சிதான் வைத்துக் கொள்ளப் போகிறோம். (மக்கள் பேராதரவுக் கை தட்டல்)

நீ சிங்கள நாட்டில் புத்த பிக்குகளைக் கட்டிக்கொண்டு ஒரு ஒற்றையாட்சியை வைத்துக்கொள். எங்கள் தாயகத்தில் புலிகளின் ஒற்றையாட்சி இருக்கப்போகிறது.

இது எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஒரு புதிய தலைவன் இதை நேர்மையாகச் சொல்கிறான். அவர் ஒற்றையாட்சி வைப்பதில் எங்களுக்கும் பிரச்சினை இல்லை.

எங்களுக்கு யார் பிரச்சினை என்றால் சமஷ்டி ஆட்சி தருவோம், கூட்டாட்சி தருவோம் என்று சொல்கிறவர்கள்தான்.

மஹிந்த நல்ல மனிதர். வைத்திருக்கட்டும் தனியாட்சியை. நாங்களும் தனியாட்சி வைத்திருப்போம்.

### விசா எடுத்துத்தான் மஹிந்த தமிழீழம் வரவேண்டும்

மற்றது தமிழர் தாயகம் இல்லை என்கிறார் மஹிந்த.

சரி. நீங்கள் சொன்னதால் தமிழர் தாயகம் இல்லாமலா போய்விடும்?

நாங்கள் 70 வீதத்தை மீட்டு வைத்துள்ளோமே ஐயா.... அங்கே பாருங்கள் எங்கள் காவல்துறை இருக்கிறது. நீங்கள் பிரபாகரனை சந்திக்க வரப்போகிறீர்கள் என்று சொல்கிறீர்கள் நீங்கள் வந்தால் எங்கள் காவல்துறைதான் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். விசா எடுக்க வேண்டும். சும்மா வர முடியாது. (மக்கள் கை தட்டல்... அடங்கா விசில் சப்தம்)

ஆகவே, சிங்களவர்களுக்கு மேல்மாடியில் (மூளையில் ஒன்றும் இல்லை) என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

தாயகம் தரமாட்டோம் என்று சொல்கிறீரே. 70 வீதமான நிலத்தை நாங்கள் மீட்டு வைத்திருக்கிறோம் அல்லவா? அங்கே ஆட்சியும் வைத்திருக்கிறோம் அல்லவா? இன்னொரு 30 வீதம்தான் இருக்கிறது. அதற்கும் வெகுகாலம் ஆகாது. அதுவும் வந்து விடும். (அடங்காத மக்கள் கைத்தட்டல்)

அதேபோல, தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை தரமாட்டாராம் மஹிந்த.

உன்கிட்ட யார் ஐயா சுயநிர்ணய் உரிமை கேட்டது...? அந்தக் காலம் எல்லாம் போய் விட்டது.

இப்போது நாங்கள் முடிவெடுத்துள்ளோம். நாங்களாகவே எங்களது தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறோம். நீ என்ன செய்யப் போகிறாய் என்று பார்ப்போம்.

உங்கள் ஆட்சியமைப்பு வேண்டாம் என்று தமிழ் மக்கள் தீர்மானித்து விட்டார்கள்.

நாங்கள் தனி வழியே போகிறோம் என்று சொல்லிவிட்டார்கள் தமிழ் மக்கள்.

ஆகவே, ஒற்றையாட்சி வைத்திருக்கிறோம், தமிழருக்கு சுயநிர்ணய உரிமை தர மாட்டோம், தமிழர் தாயகத்தை ஏற்கமாட்டோம் என்று சொல்வதில் இனி அர்த்தம் இல்லை.

ஏனென்றால், நாங்கள் இனி செல்லும் பாதை வித்தியாசமானது.

நாமாகப்போராடி வென்றெடுக்கப் போகிறோம் எமது உரிமைகளை. (மக்களின் கை தட்டல்)

### போர் நிறுத்தத்தை உடைக்க விருப்பமா?

மஹிந்த சொல்கிறார் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பேன் என்று. என்ன என்று ஐயா நீங்கள் மாற்றி அமைக்கப் போகிறீர்?

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது இருவர் செய்த உடன்பாடு. மேலும் சர்வதேச கண்காணிப்புக் குழுவும் உட்பட்டு இருக்கிறது. பல வெளிநாடுகள் இதில் தொடர்புகொண்டுள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமான உடன்பாடு அல்ல. அது ஒரு சர்வதேச உடன்பாடு. அப்படியான நிலையில் இதை நீ ஒருதலைபட்சமாக மாற்றியமைப்பேன் என்று சொன்னால் முடியுமா? முடியாது.

எங்களைக் கேட்காமல் - எங்களது அனுமதியில்லாமல் -அது முடியாது. அப்படிச் செய்தால் போர் நிறுத்தம் உடையும். அப்படி நீயாகப் போர் நிறுத்தத்தை உடைக்க விரும்பினால் உடை!

அதற்கும் நாம் தயார்!!

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி எல்லாக் கட்சியுடனும் சேர்ந்து பேசி முடிவெடுக்கப்போகிறாராம் மஹிந்த ராஜபக்ஷ.

சர்வகட்சி மாநாடு என்றால் என்ன என்று எங்களுக்குத் தெரியும்.

காலம் காலமாக சிங்கள அரச தலைமைகள், தமிழர்கள் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்க கையாளுகின்ற ஒரு கருவிதான் சர்வகட்சி மாநாடு.

27 முகங்களைக் கூட்டிப் பேசி ஓர் ஒத்திசைவான தீர்மானத்தை எடுக்கப்போகிறீர்கள் என்று நாங்கள் நம்பத்தான் வேண்டுமா?

ராஜபக்ஷவுக்கு 27 கட்சிகளது ஆதரவு இருந்தாலும் சிறுபான்மை மக்களை - தமிழர்களை - இவர் பிரதிநிதிப்படுத்தவில்லை.

ஆனால், ஓர் ஆளை ஒரு அமைச்சராக வைத்துள்ளார் மஹிந்த. அவர் யாரென்று தெரியும்...

அவருக்கு என்னமோ சமூகசேவைப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

என் நண்பர் சொன்னார்.... 'சமூக சேவை அமைச்சர்' இல்லை பாலா அண்ணா, 'சமூக விரோத சேவை'அமைச்சு என்றார் (மக்கள் கைதட்டல்)

அவரது தகுதிக்கான தகுந்த பொறுப்பு தான் அது.

### தலைவர் தரும் சிறிய இடைவெளி

மஹிந்தவுக்கு கடைசியாக தலைவர் என்ன சொல்கிறார்?.....

நான் ஒரு சிறிய இடைவெளி தருகிறேன். நீங்கள் உங்களை நடைமுறை அரசியல்வாதி, யதார்த்தவாதி. 'புலிகளோடு பேசப்போகிறேன்..புதிய அணுகுமுறையை கையாளப்போகிறேன்.' என்று சொல்லுகிறீர்கள்.

சரி... நீங்கள் நேசக்கரம் நீட்டும்போது நாங்களும் உம்மை தூக்கி எறியவில்லை. உனக்கும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். ஆனால், ஒரு குறுகிய காலம்தான் தருவோம்.

நீ அதற்குள் என்ன செய்யப்போகிறாய்?

சமாதானம், போர் நிறுத்தம், தமிழ் மக்களுக்கு எவ்வித நீதி வழங்கப்போகிறார் என்பதை கொஞ்சக் காலம்பொறுத்திருந்து பார்க்கிறோம். உம்முடன் மோத வரவில்லை.

உமக்கும் ஒரு சின்ன இடைவெளியைத் தருகிறோம்.

அடுத்த வருடம்- நீ வந்து எங்கள் மக்களுக்கு ஒன்றும் செய்யாமல் பேச்சுவார்த்தை என்று இழுத்தடித்தால் - அடுத்த வருடம் நாங்கள் எங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம் என்கிறார் தலைவர்.(மக்கள் ஆர்ப்பரிப்பு)

தலைவரது அறிக்கை வெளியானதும் சில செய்தித் தாபனங்கள் தலைவரது அறிக்கையை திரித்து எழுதியிருக்கின்றன.

தலைவர் சிறிது இடைவெளி கொடுத்திருக்கிறார். அடுத்த வருடம் என்பது அடுத்த ஆண்டு இடையிலும் இருக்கலாம் அல்லது ஆரம்பத்திலும் இந்த இடைவெளி இருக்கலாம்.

ஆனால், இவர்கள் போட்டிருக்கிறார்கள்..... இந்த மாதத்துக்குள் பிரபாகரனின் காலக்கெடு விதித்துள்ளார் எனவும், ஒரு மாதத்தில் சண்டையைத் தொடங்கப்போகிறார் என்றும் செய்திகளைத் திரித்துப் போட்டிருக்கிறார்கள்.

அப்படி பிரபாகரன் சொல்லவில்லை. ஒருமாத காலக்கெடுவை பிரபாகரன் விதிக்கவில்லை. ஒரு சிறிய காலம் என்றும் அடுத்த வருடம் என்றும் கூறுகிறார். ஒரு திகதியைக் குறிப்பிடவில்லை. ஆனால், நீண்டகாலத்துக்கு பொறுக்க முடியாது என்றும் சொல்லி இருக்கிறார்.

தலைவர் முக்கியமாக சொல்லி இருக்கிற முக்கியமான இறுதியான செய்தி.

எத்தனை இடர்கள் வந்தாலும் -
எத்தனை துன்பங்கள் வந்தாலும்-
எத்தனை சவால்கள் வந்தாலும் -அவற்றை எதிர்த்து நின்று போராடி-
தாயக விடுதலையை மீட்டெடுப்போம்!

என்று தலைவர் இறுதியாகச் சொல்வி இருக்கிறார் (ஆர்ப்பரிப்பு; ஓயாத கைதட்டல்)

இதுதான் தலைவரின் செய்தி - என்றார் அன்ரன் பாலசிங்கம்.

(க)









நேற்றுமுன்தினம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவு தின நிகழ்வுகளின் படங்களையே இங்கே காண்கிறீர்கள்.
*(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

# வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## ஜோசப்பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.29

தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கைப் பிரிக்க ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுவிடயமாக, ஜோசப் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கைப் பிரிப்பது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் தீவிர ஆலோசனை நடத்தினார். மஹிந்தவின் இந்தச் செயற்பாட்டையடுத்துப் பேரினவாத ஜே.வி.பியினரும் வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர்.

பண்பாட்டு பழக்க வழக்கங்களின் அடிப்படையில் இருபிரதேசங்களும் பிரிக்க முடியாதவை. எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியும் இந்தச் செயலைச் செய்ய நாம் அனுமதிக்க முடியாது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஸ்ரீலங்காவுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் இடையிலான அனைத்து ஒப்பந்தங்களுமே வடக்கு- கிழக்கின் இணைப்பை உறுதி செய்தும் - ஏற்றுக்கொண்டும்தான் உள்ளன.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழக்கின் எந்தப் பகுதியும், வடக்கோடு இணையலாம் என்றது. டட்லி -செல்வா ஒப்பந்தமும் கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்பவர்களை அந்நியர்கள் என்று அடையாளப்படுத்தியது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு இணைப்பை அங்கீகரித்தது. கடந்த 23 ஆண்டுகளாக வடக்கு - கிழக்கு இணைப்பு நீடித்துவருகிறது.இந்த இணைப்பை நிரந்தரமாக்கத்தான் வேண்டுமே தவிர பிரிக்கக் கூடாது.

சர்வதேச சமூகமும் வடக்கு- கிழக்கை ஏற்றுக் கொண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தமும், அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வடக்கு - கிழக்கும் பிரிக்கப்படவே கூடாது என்பதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. ஆகையால் இந்தப் பிரிப்பை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றார் அவர். (எ)

# நீதிமன்றில் நடந்த ஏல விற்பனை

யாழ்ப்பாணம் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டவையும் பறிமுதல் செய்யப்பட்டவையும் மற்றும் வழக்குத் தீர்ப்புகளின் பின்னர் உரிமை கோரப்படாதவையுமான பல்வேறு விதமான பொருள்கள் கடந்த சனிக்கிழமை காலை பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன .

மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் இந்த ஏலம் இடம்பெற்றது.

90 சிசி வகையைச் சேர்ந்த 5 மோட்டார் சைக்கிள்கள் , ஏறக்குறைய 100 துவிச்சக்கர வண்டிகள், மோட்டர்கள்,கதிரை, மேசை உட்பட கசிப்பு உற்பத்தியாளர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிளாஸ்ரிக் பரல்கள், அலுமினியப் பானைகள், கட்டில்கள் மற்றும் கசிப்பு வடிப்பதற்கான செப்பு பைப் சுருள்கள், வடிகருவிகள் என்பன ஏல விற்பனையின் பொருட்டு காட்சிப்படுத்தப்பட்டன. (எ-88)

# புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியநூல் நாளை வெளியீடு

## கைலாசபதி கலையரங்கில் வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.29

தமிழகத்தின் ஓவியர் புகழேந்தியின் ஈழப்போர் வரலாற்றுப் பதிவுகளான ஓவியங்களின் தொகுப்பு நூல் நாளை புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளியிடப்படவுள்ளது.

'புயலின் நிறங்கள்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த ஓவிய நூலின் வெளியீட்டு விழாவை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருக்கிறது.

கைலாசபதி கலையரங்கில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நூல் வெளியீடு இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சி.விஜயரூபன் தலைமையுரை நிகழ்த்துவார். வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸூம் வெளியீட்டுரையை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனும் வழங்குவர் .

யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் நூலை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை வணிக முகாமைத்துவ பீடாதிபதி தேவராசா பெற்றுக் கொள்வார்.

விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் சிறப்புரை வழங்குவார்.

சிறப்புப் பிரதியை பேராசிரியர் வி.பி.சிவநாதன் வெளியிடுவார். (ஐ)

B.Sc MATHS (வெளிவாரி)

* மேற்குறிப்பிட்ட பாடநெறிக்குரிய விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
* A/L இல் கணிதப் பிரிவில் குறைந்த சித்தியைப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
* இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
* இப் பாடநெறிக்குரிய பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

குறிப்பு:-இப் பாடநெறியானது இலங்கைப் பல்கலைக்கழக மானியக்குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டதாகும்.

விவரங்களுக்கு: யாழ். இணைப்பாளர். (43320) புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்சந்தி,யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## ஜேசுரட்ணம் கந்தவனம் பொன்னுத்துரை

(முன்னாள் அதிபர் -பருத்தித்துறை சித்திவிநாயகர் அ.த.க பாடசாலை)



கச்சாய்,கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது சுண்டுக்குளியில் வசித்து வந்தவருமான ஜேசுரட்ணம் கந்தவனம் பொன்னுத்துரை அவர்கள் 28.11.2005 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற புளோரன்ஸ் அழகம்மாவின் அன்புக் கணவரும் தேவமலர் (ஐக்கிய அமெரிக்கா), தேவபுஸ்பம் (அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தேவஅற்புதராஜா (மிருக வைத்தியர் - ஆஸ்திரேலியா), தேவகுலேந்திரன் (முகாமையாளர், இலங்கை வங்கி - காப்புறுதிப் பிரிவு, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருட்திரு. S.தேவநேசன் (ஐக்கிய அமெரிக்கா), S. S.இராஜரட்ணம் (பொறியியலாளர், **Hudec Caritas**), காலஞ்சென்ற ஜனீன் (மிருக வைத்தியர்), டிஸ்யந்தி ஆகியோரின் மாமனாரும் கிறிசாந், ஜெசாந், ஜெசிக்கா, சுஜீவா வித்தியாசங்கர், றொஷானி எட்வேட், றவீனா, றுக்ஸினி, ஷெனிக்கா, நிஷ்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆஷ்லி, வர்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.11.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரியோவான் ஸ்நானகன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தே.இராஜரட்ணம் (மகள்).

*அதிபர் இல்லம்,*
*சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,*
*சுண்டுக்குளி.021-222 2338*

(43318)(11-18-16)

பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி.

சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்

## 2006 - காலநீடிப்பு அறிவித்தல்

மேற்படி கேள்விக்கு என்னால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் திகதிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு நீடிக்கப்படுகிறது என்பதை அறியத்தருகின்றேன்.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 05.12.2005 நண்பகல் 12 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி - 06.12.2005 நண்பகல் 12 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி - 06.12.2005 பிற்பகல்2மணி

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.

(சீ-46440)
(54-15-13)



## இயந்திரப் பகுதி நிர்வாக உதவியாளர்

நிர்வாகப் பணிகளில் போதியளவு அனுபவமும் தொழில்நுட்ப அறிவும் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அச்சுஇயந்திரங்கள் சம்பந்தமான அறிவுள்ளவர்கள் பெரிதும் விரும்பப்படுவர். அச்சகப்பகுதியின் நிர்வாக பணிகளை ஒருசீர் செய்து ஒழுங்குபடுத்திச் செயலாற்றும் திறமையும் ஆற்றலும் உள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

தொழிற்சாலை ஒன்றில் தொழில்நுட்ப அலுவலராக பணியாற்ற அனுபவம் உடையோரும் விண்ணப்பிக்கலாம். யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை 45-55 வரை

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

உங்கள்முழுமையானசுயவிவரங்களுடன் 07/12/2005 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். அஞ்சல் உறையின் இடது மூலையில் பதவிப் பெயரை குறித்து அனுப்பவும்.

**உதயன் மனிதவள சேவை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 08 - 1936



மறைவு 22 - 11 - 2003

### அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

திதி: 30.11.2005

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு இரண்டு சென்றாலும்
அழியாது உன்நினைவு...

அச்செழு,
நீர்வேலி.

(43323)
(54-15-13)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பித்துரை நடராஜா

**(சாயி நடராஜா பத்தர்)**

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை நடராஜா நேற்று (28.11.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை- சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுபசாயினி (மனிதவள நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்), அருள்வாணி, டர்ஷனி (விஞ்ஞானப் பிரிவு-2006, வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 28.11.2005 திங்கட்கிழமை நடைபெற்று, சங்கானை, கரைச்சி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலிகாமம் மேற்கு
பிரதேச சபை, சுழிபுரம்.

(சீ-46444)
(54-15-13)

தகவல்:
ந.சுபசாயினியும் சகோதரிகளும்
(பிள்ளைகள்).

### சின்னத்துரை பொன்னம்மா

இல.15, ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டைச் சேர்ந்த சின்னத்துரை பொன்னம்மா அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் கந்தளாய் விதானையார் ஆறுமுகம் சின்னத்துரையின் அன்பு மனைவியும் செல்வராணி, சுத்தானந்தன் (லண்டன்), அழகுராணி சச்சிதானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(43324)
(54-15-13)

தகவல்:
பிள்ளைகள்.

## விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பகுதியின் ஏற்பாட்டில் நடத்தப்படும் கருத்தரங்கு நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி கே.ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'சிறுவர் உரிமைகளும் கடமைகளும், சிறுவர் தொடர்பான சர்வதேச சமபாய ஏற்பாடுகள் ஒரு பார்வை' எனும் தலைப்பில் எம்.சுதர்சன் கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-13)

## குடும்பஸ்தருக்கு எரிகாயம்!

தென்மராட்சி,நவ.29

தலை, முகம், நெஞ்சு ஆகிய பகுதிகள் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

மீசாலை வடக்கைச்சேர்ந்த இந்தக் குடும்பஸ்தர் படுத்திருந்த வேளையில் அவரது இரண்டு வயதுக் குழந்தை தூக்கிவந்த குப்பி விளக்குத்தவறி அவர் மீது வீழ்ந்ததில் எரிகாயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## மரண அறிவித்தல்

### ஆழ்வார் இராமநாதன்

(ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்டவரும், காலஞ்சென்ற ஆழ்வார் பாறுபதி தம்பதியரின் ஏக புத்திரனும், இந்திராவின் பாசமிகு கணவரும் சிறிதிவாகரின் (யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்), தந்தையும் திருமதி சரஸ்வதி நாகேந்திரராஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கந்தையா முருகேசுவின் (ஓய்வு பெற்ற பட்டயக் கணக்காளர்)மருமகனும், கா.இராமஜெயம் (ஆசிரியர், நெல்லியடி ம.ம.வித்தியாலயம்) அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.11.2005. செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது கரணவாய் மத்தி, குகன் இல்லத்தில் நடைபெற்று, எள்ளங் குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சீ-46442)
(54-15-13)

தகவல்
கா.இராமஜெயம்
(சகலன்).

## கண்ணீர் அஞ்சலி

### ஆழ்வார் இராமநாதன்

(ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

யா/உடுப்பிட்டிமகளிர் கல்லூரியில் 1989 ஆம் ஆண்டு முதல் வணிகத்துறை ஆசிரியராகக் கடமையாற்றிவரும் ஆ. இராமநாதன் அவர்கள் அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சீ-43445)

பாடசாலை கல்விச் சமூகம்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.


**ராஜா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ஸ்ரேயா,
வடிவேல் நடித்த

**மழை**

காட்சிநேரம்:
பு.நே.
10.30, 2.30 , 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்



விக்ரம், அஸின், வடிவேல்,
மணிவண்ணன்
நடித்த

காட்சிநேரம்:
புது நேரம்
11.00, 3.00, 7.00,

**மனோகரா** யாழ்ப்பாணம்





## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியா-பினாங்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான மகேஸ்வரி அவர்கள் 27.11.2005 ஞாயிற்றுக்கிழமை பினாங்கில் காலமாகிவிட்டார்.

அன்னார் கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் கோலாம்பூரில் வசித்தவருமான காலஞ்சென்ற செல்லப்பா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சேனாதிராசா- நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும் செல்லப்பா -சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் இராசேஸ்வரியின் (நாகேஸ்வரி) அன்புச் சகோதரியும் சுரேஸ்குமார், சுகுணவதி, ஞயனேஸ்குமாரின் (மலேசியா) ஆகியோரின் தாயாரும் தெய்வநாயகி, டாக்டர் றகுபதி (மலேசியா), டாக்டர் மேனகாவின் அன்பு மாமியாரும் டினேஸ், சுனேத்திரா, மீரா, கமலபதி, டீபா, சோனியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (27.11.2005) மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(43327)
(54-15-13)

தகவல்:
பூ. வெற்றிவேலு (மைத்துனர்)
இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி.

### இராஜேந்திரம் குயின்ரன் (கூபின்)



இல.15/1, இராஜேந்திரம் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை (வேலூர்) வதிவிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் குயின்ரன் (கூபின்) அவர்கள் நேற்று (28.11.2005) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் இராஜேந்திரம் (பேபி)- வியாட்டீஸ் தம்பதியரின் மூத்த புதல்வனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் தனுஷயன், நிரோசன் ஆகியோரின் அன்புத் தந்தை யும் ராணி, பவளம், தாசன், கலா, சரஸ் ஆகியோரின் அன்புச் சகோ தரனும் அமரர் வைத்திலிங்கம்- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2005) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கத்தோலிக்கசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/1, இராஜேந்திரா வீதி,
குருநகர்.

(43326)
(54-15-13)

தகவல்:
இராஜேந்திரம் (பேபி)
(தந்தை).

### திருமதி மயிலு வள்ளிப்பிள்ளை



குடமியன், வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயிலு வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (28.11.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலுவின் அன்பு மனைவியும் சின்னத்துரை (இராசேஸ் ஸ்ரோர்ஸ் - கொடிகாமம்), சின்னராசா (கோகிலா தேனீரகம், கோகிலா தொலைத்தொடர்பகம்), அமரர் இராமச் சந்திரன், செல்வராசா, (கஜமுகன் ஸ்ரோர்ஸ் - கொடிகாமம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேஸ்வரி, சூரியகலா, கிருஸ்ணராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா, (ஜேர்மனி), தீபகரன் (லண்டன்), நளாயினி, துளசிகரன், கோகிலா (லண்டன்), சுதாகரன் (லண்டன்), அர்ச்சனா, சுகன்யா, விநோதன், சுகிர்தா, லசோதன், சிவலோகநாதன் (ஜேர்மனி), பாஸ்கரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரணி, அஸ்வின், அலானா, அர்ச்சலா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 2 மணியளவில் குடமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன்,
வரணி.

(43328)
(54-15-13)

தகவல்:
பிள்ளைகள்.

### சிவஸ்ரீ கணேசராஜக்குருக்கள் செல்லம்மா அம்மையார் (புங்குடுதீவு கிழக்கு)



புங்குடுதீவு கிழக்கு, காலஞ்சென்ற சிவஸ்ரீ கணேசராஜக்குருக்கள் (சின்னத்துரை ஐயா) அவர்களின் பாரியார் செல்லம்மா அம்மையார் நேற்று (28.11.2005) திங்கட்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் சிவஸ்ரீ குகதாசக் குருக்கள் (ஆனைக்கோட்டை), சிவஸ்ரீ சண்முகதாசக்குருக்கள் (லண்டன்), சிவஸ்ரீ சிவபாலக்குருக்கள் (கொம்பனித்தெரு), காலஞ்சென்ற திருமதி ம. பவானியம்மா, சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள் (சுவிஸ்லாந்து), சிவஸ்ரீ சாமிநாதக்குருக்கள் (ஜேர்மனி), திருமதி சு.நிரஞ்சனாதேவி (மானிப்பாய்), சிவஸ்ரீ சிவகுமாரக்குருக்கள் (மலேசியா), சிவஸ்ரீ சிவசுதக்குருக்கள் (பிரான்ஸ்), திருமதி ஆ.சாம்பவி (இந்தியா), ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற திருமதி கு. நாகலட்சுமிஅம்மா, திருமதி கு.சுலோஜனாதேவி, திருமதி ச.மாணிக்கவல்லி, திருமதி சி. சாரதா, சிவஸ்ரீ ந. மகேஸ்வரக்குருக்கள், திருமதி சு. குணசுந்தரி, திருமதி சாமி, சுலோஜனாதேவி, சிவஸ்ரீ ந. சுப்பிரமணியக்குருக்கள், திருமதி சி.அருந்ததி, திருமதி சி.சசிகலா, இ. ஆனந்தரட்ணசர்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை
P:- 081 – 2213734

(சீ-46444)
(54-15-13)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# யுத்த நிறுத்த உடன்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரமாகும்.

என்னுடைய நிகழ்ச்சித் திட்டம் தெளிவானது. சமாதானத்தை அடைவதற்கான நடவடிக்கைகள், நம்பிக்கையிலும், உறுதியிலும் தான் கட்டப்படவேண்டும். மிக முக்கியமாக முழுமையாக வழங்கப்படக்கூடிய பற்றுதியின் மீதே சமாதானம் கட்டப்படவேண்டும். அதற்காகத்தான் இந்த முனையில் அரசியல் அமைப்புகளுக்கிடையே இணக்கப்பாட்டை நான் கட்டியெழுப்பினேன். அப்படியானால் தான் சமாதானப் பேச்சுகளில் நாம் காணப்படும் உடன்பாடு முழு அளவில் பயன் தருவதாக அமையும்.

ஜனாதிபதித் தேர்தல் வரையிலும், தேர்தல் அன்றும் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் எப்படி இருந்தாலும், எதிர்காலத்தில் எல்லாமட்டத்திலும் நடக்கும் தேர்தல் வாக்களிப்பு. நீதியாகவும், நேர்மையாகவும் நடக்கும் விதத்தில் தேர்தலுக்குக் குறுக்கே புலிகள் நிற்கமாட்டார்கள் என நான் நம்புகிறேன்.

தாமதமின்றி பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற அழைப்பிற்கும் அவர்கள் சாதகமாக பதிலளிப்பார்கள் என நம்புகின்றேன்.

ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் வெளிப்படைத்தன்மை, எளிமையான போக்கு ஆகியவற்றை அத்திபாரமாகக் கொண்ட அணுகுமுறையையே நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். சம்பந்தப்பட்ட அனைவரோடும் கலந்துரையாடலை ஆரம்பிக்க நான் எண்ணியுள்ளேன்.

இது விடயத்தில் நட்புக்கரத்தை நீட்டும் வகையில், என்னுடைய நடைமுறை சாத்தியமான அணுகுமுறையையும், அழைப்பையும் அங்கீகரித்து நேற்று பிரபாகரன் வெளியிட்ட கருத்துகளை நான் வரவேற்கின்றேன். பேச்சுக்கு வருமாறு பிரபாகரனுக்கு நான் விடுத்த அழைப்பை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்துவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நான் விரும்புகின்றேன்.

நிரந்தரத் தீர்வுக்கான பயனுள்ள பேச்சுகளுக்கு எம்மை தயார்ப்படுத்திக் கொள்ளும் அதேசமயம், யுத்தநிறுத்த செயல்பாட்டை மீளாய்வு செய்வது குறித்த பணியை உடனடியாக நாங்கள் ஆரம்பிக்கலாம். இந்த இரு செயற்பாட்டையும் சமாந்தரமாக ஒரே சமயத்தில் நாம் செய்யலாம். ஒன்றன்பின் ஒன்றாக இதனை நாம் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை.

யுத்தநிறுத்தத்தைத் தொடர்வதில் எனது அரசின் பற்றுறுதியை இங்கு மீள உறுதிப்படுத்துகிறேன்.

புலிகள் யுத்தநிறுத்தத்தை முழுமையாகப் பேணுவதன் மூலம் - குறிப்பாக மனித உரிமைகளைப் பேணுதல், சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதிலிருந்து விலகியிருத்தல், அரசியல் கொலைகள், கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளாதிருத்தல் ஆகியன சம்பந்தமான ஏற்பாடுகளைக் கைக்கொள்வதன் மூலம் - இலங்கை மக்களதும் சர்வதேச சமூகத்தினதும் குரலைப் புலிகள் ஏற்றுச் செவிமடுப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

மூன்றரை வருட யுத்த நிறுத்தத்தின் பின்னர் இப்போது யுத்தநிறுத்த உடன்பாட்டின் செயற்பாடு குறித்தும் அதிக பயனுள்ள விதத்திலும் செயற்திறன் உள்ள வகையிலும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்தும் மீளக் கவனிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நான் தெளிவுபடுத்திய கருத்துகளின் மீது இலங்கை மக்கள் தம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அமைதி முயற்சிகள் வெளிப்படையாக இருக்கவேண்டும் என்பதை நான் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளேன். இப்போதையதை விட மேலும் வெளிப்படையானதும் பலவற்றையும் சேர்த்துக் கொள்ளக்கூடியதுமான அமைதிமுயற்சியைச் செயற்படுத்தவும் நான் திட்டமிட்டுள்ளேன்.

இந்த நாட்டின் அமைதி முயற்சி பற்றியே நாம் பேசுகின்றோம்.

சர்வதேச சமூகம், எமது நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு - குறிப்பாக தசாப்தகால அழிவுகளினால் ஏற்பட்ட பாதிப்புகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு - மிகுந்த ஆதரவாக உள்ளது.

அபிவிருத்திக்கான எமது தோழர்களின் இந்தத் தாராளமான நிதி உதவியை மெச்சும் அதே சமயம், வடக்கு - கிழக்கில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் விதத்தில் அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்பைத் துரிதப்படுத்தும் விடயத்தில் எனது அரசு விசேட கவனம் செலுத்தும். இது சமாதானத்தின் பெறுபேறு மக்களுக்கு அதிக அளவில் பயனாகக் கிடைப்பதை உறுதி செய்யும்.

வடக்கு, கிழக்கு மக்களின் ஜனநாயகம் மற்றும் பல்லினத்தன்மையைப் பலிகொடுக்காமல் சமாதானத்தை ஏற்படுத்துவதை உறுதி செய்வதற்கு சர்வதேசத்தின் உதவி எமக்குத் தேவை. ஜனநாயகமும், பல்லினத்தன்மையும் கையகப்படுத்த முடியாத உரிமைகளாகும்.

### வெளிநாட்டுக் கொள்கை

எனது அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் எதனையும்கொண்டுவர விரும்பவில்லை. சுருங்கக் கூறின் எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவோம். எள்ளளவும் பகைக்க மாட்டோம்.

நாடாளுமன்றத்தில் எனது அரசின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய கையோடு ராஜதந்திரிகளான உங்களைச் சந்தித்துப் பேச விரும்பினேன்.எனது அரசின் கொள்கைகளை நாங்கள் நட்புறவு பாராட்டும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியே இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்களும் இந்த மாநாட்டிற்கு வருகை தந்ததன் மூலம் பரஸ்பரம் எமது நாடுகளுக்கிடையிலான நட்புறவை வளர்ப்பதற்கு உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

எனது அரசின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் எவ்வித மாற்றமும் இருக்காது. தொடர்ந்தும் அதே கொள்கையே கடைப்பிடிக்கப்படும்.எமது வெளிநாட்டுக் கொள்கை எல்லாநாடுகளுடனும் நட்புறவை வளர்ப்பதேயாகும். யாருடனும் பகைமை பாராட்டுவதில்லை. இந்த அடிப்படையில் எமது கொள்கை முன்னெடுப்பு அணிசேரா இயக்கக் கொள்கைகளை அடியொற்றியதாகவும், எமது தேசிய நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு வளர்முக நாடுகளின் கோட்பாடுகளுக்கு இசைந்ததாகவும் இருந்து வரும். எமது அரசு அண்டை நாடுகளுடன் பரஸ்பரம் நட்புறவை வளர்த்துவரும். அதே நேரத்தில்,ஆசியாவிலுள்ள இதர நட்பு நாடுகளுடனும் நல்லுறவைப்பேணி வளர்த்து வரும். இது மட்டுமல்ல, எமது நட்புறவை உலகின் பல்வேறு நாடுகளுடனும் பேணி வருவோம்.இதன்மூலம் சர்வதேச அரங்கில் நாடுகளின் மத்தியில் பொது நல்லிணக்கப் பாடொன்றைக் கட்டியெழுப்பும் சக்தியாக இலங்கையும் மிளிரும்.

கடந்த காலங்களில் எமது நாடு சர்வதேச அரங்கில் தனது ராஜதந்திர செயற்பாடுகள் மூலம், பல்வேறு விவகாரங்களில் நாடுகள் மத்தியில் பொது இணக்கப்பாடொன்றை கைகூட வைத்து நாட்டிற்கு பெருமை சேர்த்திருக்கிறது. உதாரணத்திற்கு கடல்வலயச்சட்டம், ஆயுத பரிகரணம்,மனிதஉரிமைகள் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு போன்றவற்றில் பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதைக் குறிப்பிடலாம்.

இத்தகைய நற் செயற்பாடுகளை சர்வதேச அரங்கில் பொது இணக்கப்பாட்டோடு மேலும் முன்னெடுப்பதற்கு வசதியாகவே ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பதவிக்கு ஆசியாவின் பிரதிநிதியாக எமது நாட்டவரான ஜயந்த தனபாலவை பிரேரித்திருக்கிறோம்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் எனது அக்கறைபற்றி உங்களுக்குத் தெரியும். எமது சர்வதேச முன்னெடுப்புகள் எல்லாம் மனித உரிமைகள் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்பதே.

இது விடயத்தில் இலங்கை தொடர்ந்தும் பாடுபடும். இலங்கையிலும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இதன் பொருட்டு நான் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய மனித உரிமைகள் சாசனம் ஒன்றை இங்கு கொண்டுவர இருக்கிறேன்.இதனை நாட்டின் அரசமைப்போடும் சேர்க்க விருக்கிறேன்.

பொருளாதார வளர்ச்சி பற்றி இங்கு சொல்ல விரும்புகிறேன். எமது பொருளாதார வளர்ச்சி 8 சதவீதத்திற்கு அதிகரிக்க வேண்டும். இதன் பொருட்டு தீவிரமான முறையில் வெளிநாட்டு மூலதனங்கள் கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.தனியார் துறையினரின் பங்களிப்பும் கோரப்படும். எமது இந்தப் பொருளாதார வளர்ச்சிக் கொள்கையை மிலேனியம் அபிவிருத்தி இலட்சியக் கட்டுக்கோப்புக்குள் முன்னெடுப்பதே எனதுநோக்கமாகும். வறுமை குறைப்புத்திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும். வெளிநாட்டு மூலதன நட்புறவுக்கொள்கையை முன்னெடுப்பதன் மூலம் இதனை முன்னெடுத்துச் செல்வோம்.

எமது நாட்டின் அபிவிருதிக்குத் தாராளமாக ஆதரவு வழங்கிய அபிவிருத்திப் பங்காளிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (க)

## அரசுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிப்பதற்காகவே இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்திய அரசின் உதவியைப் பெறுவதற்காக இந்தியாவுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளார் என்றும் இ.தொ.கா. வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

## பில்கிளின்ரன் நேற்று கொழும்பு வந்தார்

ஆழிப்பேரலையின் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கொழும்பு வந்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இந்து சமுத்திர நாடுகளைச் சேர்ந்த மக்களுக்காக மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு ஐ.நா.சபையால் பில்கிளின்ரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பில்கிளின்ரன் கடந்த மே மாதம் இலங்கைக்கு வந்து ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை பார்வையிட்டிருந்தார். (ஒ-13)

## அரசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் வழங்கத் தயாராகவே இருக்கிறோம்.''- என்றார் அமைச்சர் திஸ்ஸ விதாரண.

இதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அரசமைப்பு விவகார அமைச்சரும், கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தருமான டியூ குணசேகர, மஹிந்த ராஜபக்ஷவும், பிரபாகரனும் யுத்தவாதிகளென்று பரப்பப்பட்ட கருத்து இன்று பொய்யாகியிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

''1989ஆம் ஆண்டிலிருந்து நான் பிரபாகரனின் மாவீரர் உரையினைக் கேட்டுவருகிறேன். இம்முறை அவரின் உரை முன்னரை விட வித்தியாசமாகவும், தற்போதைய கள நிலைமைக்கு ஏற்றவாறும் அமைந்திருந்தது. உண்மையில் யுத்தவாதியாகச் சித்திரிக்கப்பட்ட பிரபாகரன் சமாதானத்தின்பால் தனது அக்கறையை வெளிப்படுத்தியிருக்கின்றார். புதிய ஜனாதிபதி அதனை தவறவிடமாட்டார்.'' - என்றார் அமைச்சர் டியூ குணசேகர. (க)

## ஜனாதிபதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளமை தொடர்பான அடிப்படைக் காரணங்களைக் கண்டறியுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி நிதி அத்தியாவசியச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. கடும் பாதிப்புக்குட்பட்டுள்ள நோயாளி ஒருவரின் அவசர அத்தியாவசிய தேவைக்கென அந்நிதியத்திலிருந்து உதவியைப் பெறுவது தொடர்பாக தொகையான ஆவணங்கள் முன்வைக்கப்படவேண்டியிருக்கும். அதற்கான அனுமதி கிடைக்கப் பல மாதங்கள் வரையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இத்தகைய நிலையில் எத்தகைய தாமதமுமின்றி உடனடியாகப் பெருந் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதை அதிகாரியொருவர் ஆச்சரியம் வெளியிட்டார்.

- இவ்வாறு அச்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ-206)


அரசியல்விஞ்ஞானம் A/L2006
துரித மீட்டல்
வினா விடை வகுப்புகள்
(சுருக்கமான விடைகள் விளக்கப்படும்)
V.K.செல்வா
இடம்: பட்டப்படிப்புகள் கல்லூரி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 03.12.2005 சனி 1 மணி
(43295) (25-15)

போட்டிப் பரீட்சை வழிகாட்டிநூல்
விற்பனையில் விலை: 150/-
*வெளிக்கள போதனாசிரியர்
*சமூகசேவை உத்தியோகத்தர் பரீட்சைகளுக்குரிய பொதுஅறிவு, பொது உளச்சார்பு
தொகுப்பு: த. தவசேகர்
* D.M.I யாழ்.நகர், கிறிஸ்ரல் நெல்லியடி மற்றும் யாழ். நகரப் புத்தக நிலையங்களில் கிடைக்கும்
(43325) (25-15)

விற்பனையாகிறது
குழந்தை உளவியலும் கல்வியும்
பேராசிரியர் சபா ஜெயராசா
விலை 350/-
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:6693 (43322) (25-15)

விற்பனையாகிறது
காணி அபிவிருத்தி போதனாசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி
பொது அறிவும் உளச்சார்பும்
5000 மேற்பட்ட விடயங்களுடன் [கடந்த கால வினாத்தாள்கள் விடையுடன்]
P.உமாசங்கர்
விலை 160/-
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (43303) (25) T.P:6693

சலுகை முடிவு
01.12.2005 முதல் SAAMSTECH இன் ஆங்கில நேரடிவகுப்புக்கான கட்டணம் ரூ.6000/- ஆக மாற்றப்படுகிறது
சலுகை
31.11.2005 வரை ஆங்கில நேரடிவகுப்புக்கு சலுகைக்கட்டணம் ரூபா 3000/- மட்டும்.
இதில் முதல் 100 பதிவுகளுக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள் மற்றும் CD முற்றிலும் இலவசம்
SAAMSTECH
841, Hospital Road, Jaffna. 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna. 2229505

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்!
விண்ணப்ப முடிவுத்திகதி 15.12.2005
இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

ஆசிரியர்பீட நிர்வாக உதவியாளர்
ஆசிரியர்பீட நிர்வாக அலுவலகங்களைக் கவனிப்பதற்கு உதவியாளர் ஒருவர் தேவை. நிர்வாக அலுவல்களில் மட்டுமன்றி ஒரு செயலாளருக்கு உரிய பணிகளைச் செய்வதிலும் அனுபவம் உள்ளவர்கள் பெரிதும் விரும்பப்படுவர்.
தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன் தொடர்பாடல், இணைப்பாளர் பணிகளிலும் பயிற்சியுள்ள, சொந்தத்தில் பணியாற்றும் ஆற்றலும் திறமையும் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 40 முதல் 55 வரை.
பத்திரிகைப் பணிமனை ஒன்றில் இதே வகைப் பணிகளை செய்தவர்களுக்கும், யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
உங்கள் முழுமையான சுயவிவரங்களுடன் 07.12.2005க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். அஞ்சல் உறையின் இடது பக்க மூலையில் பதவிப் பெயரைக் குறித்து, கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
உதயன் மனிதவள சேவை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்'(பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.